தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 02, இதழ் : 320 பிலவ வருடம், ஆவணி மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை
(06.09.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 27, 0115886187 - பக்கங்கள் 08
'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

# அமைச்சுகளில் செலவுகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு செயலாளர்களுக்கு நிதி அமைச்சு அறிவுறுத்து

• *யோ.தர்மராஜ்*

அமைச்சுகள் ஒவ்வொன்றிலும் குறைக்கக் கூடிய செலவு குறித்த விரிவான அறிக்கையை இந்த வாரத்திற்குள் சமர்ப்பிக்குமாறு அனைத்து அமைச்சின் செயலாளர்களுக்கும் நிதி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கட்டுப்படுத்தக் கூடிய செலவுகள் மற்றும் அவ்வாறு கட்டுப் படுத்துவதன் ஊடாக சேமிக்கப்படும் நிதியின் தொகை குறித்து உடனடியாக தெரிவிக்குமாறு நிதி அமைச்சினால் அனைத்து செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றின் நெருக்கடியைத் தொடர்ந்து, அரசாங்க வருமானங்கள் அனைத்தும் எதிர்பார்த்ததை விட கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன், அந்த வருமானங்கள் இந்த ஆண்டு அரசாங்க செலவுகளை சமாளிக்கக் கூடியளவிற்கு போதுமானதாக இல்லை என்பதையும் கவனத்தில் கொண்டே செலவுகளை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவினால் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவது குறித்து கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, விளக்கமளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தாலும், இதுவரை ஆரம்பிக்கப்படாதுள்ள அனைத்து திட்டங்களையும் நிறுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் அமைச்சுகளில் புதிய கொள்வனவுகள் மற்றும் கட்டுமானம், சீரமைப்புப் பணிகளையும் நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளின் வருகையின் அடிப்படையில் எரிபொருள் கொடுப்பனவுகளை வழங்குதல் மற்றும் அவர்கள் பணிக்கு வரும் நாட்களில் மட்டும் அவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்குமாறும் நிதி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



வரலாற்றுப் புகழ்பெற்ற நல்லைக் கந்தன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா மட்டுப்படுத்தப்பட்ட ஆச்சாரியர்கள், தொண்டர்களின் பங்குபற்றலுடன் நேற்று உள்வீதியில் இடம்பெற்றது. (படம்: ஐ.சிவசாந்தன்)

## நக்கல் நமசிவாயம்




# தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடையும் ஆபத்து!

## இரசாயன உரத் தடையை சுட்டிக்காட்டி நிபுணர்கள் எச்சரிக்கை

• *நமது விசேட செய்தியாளர்*

இலங்கையில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இரசாயன உரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் இந்நிலைமை ஏற்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளதுடன் கருவா, மிளகு போன்ற உப உற்பத்திகளும் பாதிப்பை எதிர்நோக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இரசாயன உரத்துக்கான தடை காரணமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் சேதனப் பசளை மாற்றுத் திட்டத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் நிபுணர் ஹெர்மன் குணரத்ன தெரிவித்துள்ளார்.

தேயிலைத் தொழிற்றுறை முற்றுமுழுதாக ஆபத்தை எதிர்நோக்கும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 10 வீதம் தேயிலை ஏற்றுமதியில் கிடைக்கப்பெறுகிறது. இந்நிலையில் தேயிலைக்கு சேதனப் பசளை பயன்பாடானது 10 மடங்கு மேலதிக செலவை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஐ.நா பொதுச் சபையில் பங்கேற்க ஜனாதிபதி இம்மாத இறுதியில் அமெரிக்கா செல்கிறார்



## இந்தியப் பிரதமர் மோடி உட்பட்ட உலக அரசியல் தலைவர்களுடன் முக்கிய சந்திப்பு

## வொஷிங்டன் செல்லமுன் தமிழர் பிரச்சினை தீர்வு குறித்து அரசு தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேசும்



• *நமது அரசியல் செய்தியாளர்*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த மாத இறுதியில் அமெரிக்கா செல்லவுள்ளார். கொரோனா தடுப்பு உயிர்க்குமிழி சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி இந்த விஜயம் இடம்பெறவுள்ளது.

ஐ.நா. பொதுச் சபையின் 76 ஆவது கூட்டம், நியூயோர்க்கில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகி 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதிவரை அமெரிக்காவிற்கான விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனாத் கொலம்பகே ஆகியோர் செல்லவுள்ளனர். 02»

# 20 வயதிற்கு மேற்பட்டோருக்கு இன்று முதல் தடுப்பூசி வழங்கல்

## கொழும்பு உட்பட்ட நான்கு மாவட்டங்களில் ஆரம்பம்

• *நா. தினுஷா*

கொழும்பு 1 முதல் 15இற்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கிணங்க, சீன தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசிகளை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கவுள்ளதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

02»

# நியூஸிலாந்தில் கொல்லப்பட்ட ஆதிலின் தாயாரிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு!

## புலனாய்வுப் பிரிவினர் பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை



• *கனகராசா சரவணன்*

நீண்ட நாட்களின் பின்னர் எனது மகன் ஆதில் கடைசியாக கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை 5 மணிக்கு என்னுடன் தொலைபேசியில் கதைத்துவிட்டு சாப்பாட்டுக்கு கடைக்கு சென்று வந்த பின்னர் கதைப்பதாக தெரிவித்து தொலைபேசியை துண்டித்த பின்னர் ஆதில் நியூஸிலாந்து பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என தனக்கு சில மணித்தியாலங்களின் பின்னர் தான் தெரியவந்துள்ளதாக முகமது சம்சூதீன் ஆதிலின் தாயாரான இஸ்மாயில் சரிதா பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். 02»

### இந்தியர்களின் அத்துமீறல்கள்

# கடும் அதிருப்தியில் வடக்கு கடற்றொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அறிவிப்பு

• *யாழ். செய்தியாளர்*

இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் முறைகளினால் ஏற்படுகின்ற பாதிப்புகளில் இருந்து தங்களை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் பொறுமையின் எல்லையில் இருப்பதாகவும் வடக்கு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினைக் கண்டித்துள்ள வடக்கு கடற்றொழிலாளர்கள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதிருந்த நம்பிக்கையினையும் இழந்துள்ளதாக தெரிவித்திருப்பதுடன், தமது கடல் வளத்தினையும் வாழ்வாதாரத்தினையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ள நிலையில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அன்னராசா மற்றும் உப தலைவர் வர்ணகுலசிங்கம் ஆகியோர்... 02»

# இன்று கூடுகிறது நாடாளுமன்றம்

## உறுப்பினர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கவும் தீர்மானம்

• *நா. தினுஷா*

செப்டெம்பர் மாதத்துக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ளது. கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக சபை அமர்வுகள் இரு நாட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இன்றும் நாளையும் நாடாளுமன்றம் கூடவுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 02 ஆவது பிரிவினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய அத்தியாவசிய.... 02»

# கொவிட் ஜனாஸாக்களை கிண்ணியாவில் அடக்கம்செய்ய அனுமதி



• *சீனக்குடா நிருபர்*

கொரோனா தொற்றினால் மரணிப்பவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு கிண்ணியா வட்டமடு கிராமத்தில் 10 ஏக்கர் அரச காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்காணியை கொவிட் 19 தொழில்நுட்ப குழு ஆய்வுகளை மேற்கொண்டு சிபாரிசு செய்ததையடுத்தே கொவிட் 19 செயலணியினாலும் சுகாதார அமைச்சினாலும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 02»

# மேலும் இரு வாரங்களுக்கு நாட்டை முடக்க வேண்டும்

## மருத்துவ சங்கம் அரசுக்கு பரிந்துரை

• *யோ.தர்மராஜ்*

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கக் கூடிய உயிர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு நாட்டின் முடக்கத்தை மேலும் சில காலத்திற்கு நீடிக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

ஒக்டோபர் 2 ஆம் திகதி வரை நாடு முடக்கப்படுமாக இருந்தால் 10 ஆயிரம் உயிர்களைக் காப்பாற்ற முடியும் என இலங்கை மருத்துவ சங்கத்தின் விசேட வைத்தியர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலைமை குறித்து இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் பத்மா குணரத்ன கருத்து தெரிவிக்கையில், 02»

# நாட்டுக்கு மேலும் 40இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள்




கொரோனா நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட சரக்கு விமானத்தினூடாக நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன.

சீனாவிடமிருந்து இதுவரையில் இலங்கை 2 கோடியே 20 இலட்சம் (22 மில்லியன்) தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

அதேபோன்று இம்மாதம் முடிவடைவதற்கு முன்னர் ரஷ்யாவின் தயாரிப்பான ஸ்புட்னிக் வி ஒரு இலட்சத்து 20 ஆயிரம் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு வாரங்களுக்கு பின்னர் கொரோனா மரணங்களில் வீழ்ச்சி

***யோ.தர்மராஜ்***

நாட்டில் இரு வாரங்களுக்கு பின்னர் கொரோனா நோயாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதன்படி, நேற்றுமுன்தினம் நாட்டில் 145 மரணங்களும் 3 ஆயிரத்து 333 கொரோனா நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

கொரோனா தொற்றின் தீவிரத்தால் நாட்டில் கடந்த மாதம் தொடக்கம் நாளுக்கு நாள் கொரோனா நோயாளர்கள் 4 ஆயிரத்தை தாண்டியும் மரணங்கள் 200 ஐ தாண்டியும் பதிவாகின.

இந்த நிலையில், கடந்த மாதம் தொடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கையடுத்து தற்போது நாளுக்கு நாள் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களும் மரணங்களும் வீழ்ச்சியடைந்துள்ளன.

அதன்படி, முதலாம் திகதி தொடக்கம் நோயாளர்களின் எண்ணிக்கையில் சிறிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. முதலாம் திகதி 3 ஆயிரத்து 828 பேரும் 2 ஆம் திகதி 3 ஆயிரத்து 627 பேரும் 3 ஆம் திகதி 3 ஆயிரத்து 644 பேரும் அடையாளம் காணப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் 3 ஆயிரத்து 333 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாளுக்கு நாள் பதிவாகும் மரணங்களிலும் தற்போது சிறிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதன்படி, கடந்த முதலாம் திகதி 204 மரணங்களும் 2 ஆம் திகதி 202 மரணங்களும் பதிவாகிய நிலையில், 3 ஆம் திகதி 145 மரணங்கள் பதிவாகியுள்ளன. இதனால், தற்போது கொரோனா நோயாளர்கள் மற்றும் மரணங்களில் சிறிய வீழ்ச்சி காணப்படுவதாக சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் இதுவரை 9 ஆயிரத்து 951 மரணங்களும் 4 இலட்சத்து 59 ஆயிரத்து 459 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.



**புறக்கோட்டை மெனிங் சந்தையில் பொருட்கொள்வனவுக்காக பெருந்திரளான வாடிக்கையாளர்கள் நேற்று வருகை தந்திருந்தனர்.**
***(படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)***

# அரசு தோல்வியை மறைப்பதற்காக அடக்குமுறையை உபயோகிக்கிறது

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

தனது தோல்வியை மறைக்கும் முகமாக தற்போதைய அரசாங்கம் அடக்குமுறையை தீவிரமாக செயல்படுத்த முயல்கிறது என்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குகிறோம் என்ற போர்வையில் அவசரகால சட்டத்தை விதிப்பதில் இது தெளிவாகப் புலப்படுவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஏற்படும் மக்கள் போராட்டங்களை அடக்குவதற்கு பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தும் கட்டளைச் சட்டம் போன்ற சட்டங்களை அரசாங்கம் தவறாகப் பயன்படுத்துவது அவமானமாகும்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட சமீர கொஸ்வத்த, வசந்த முதலிகே, அமில சந்தீப மற்றும் கௌசிலா ஹன்சமாலி ஆகியோருக்கு பிணை வழங்கத் தவறியதிலும், பிணை வழங்குவதைத் தடுக்க தவறான மதிப்பீடு செய்வதற்கான கோரிக்கையிலும் இது தெளிவாகத் தெரிகிறது. காட்போர்ட் அட்டை மற்றும் ரெஜிபோர்ம் போன்றவற்றால் செய்யப்பட்ட சவப்பெட்டியின் மாதிரிகளைக் கொண்டு நெடுஞ்சாலையில் தீ வைக்கப்பட்டதால் காபர்ட் விரிப்புகளுக்கு ஒரு இலட்சத்து 79ஆயிரம் ரூபா சேதம் ஏற்பட்டதாக பொலிஸாரால் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கை தவறானதும் போலியானதுமான மதிப்பீடுகளாகும்.

சிறைச்சாலைகளில் இட நெரிசலைக் குறைக்க பிணையில் விடுதலை செய்யமுடியுமான அனைவருக்கும் பிணை வழங்குமாறு கடந்த ஆகஸ்ட் 10 ஆம் திகதி அன்று சட்டமா அதிபர் கோரிய போதிலும் பொலிஸ்துறை இவ்வாறு செயல்படாதது ஏன் என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

சந்தேக நபர்கள் பிணை மனு கோரலுக்காக பொலிஸாரால் தற்காலிக நீதவான் முன்னிலையிலேயே ஆஜர்படுத்தப்படுகின்றனர். இது திட்டமிட்ட நடவடிக்கையா என்று நாங்கள் கேள்வி எழுப்புகிறோம்.

சிறையில் இருக்கும்போது சந்தேகநபர்களுக்கு கோவிட் ஏற்படும் அபாயத்தை சட்டத்தரணிகள் வலியுறுத்தியுள்ள போதிலும், நல்ல ஆரோக்கியத்துடன் பதுளையில் உள்ள தல்தேன தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட சாமிர கொஸ்வத்த, வசந்த முதலிகே மற்றும் அமில சந்தீப ஆகிய மூவரும் தொற்றால் பாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர். அவர்கள் இப்போது வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சுமார் 10 × 12 அடி அளவிலான அறையில் சுமார் 40 பேருடன் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கிறது. இது அவர்களின் உயிருக்கு கடுமையான அச்சுறுத்தலாகும்.

# இராணுவத் தளபதி ஷவேந்திரவை பிரித்தானியாவில் தடைசெய்க!

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர் கையளிப்பு

ஜெனீவா அமர்வு நெருங்கும் நிலையில் இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வாவை பிரித்தானிய அரசு தடை செய்ய வேண்டும் என வலியுறுத்தி அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மகஜர் கையளிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜெனீவா கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வாவை பிரித்தானிய அரசு தடை செய்ய அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரியும், போர்க் குற்றத்திற்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களால் பிரித்தானியா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர் கையளிக்கப்பட்டு வருகிறது.




அத்துடன் பிரித்தானிய அரசாங்கம் இந்த விடயத்தில் சர்வதேச நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

## இந்தியர்களின்....

மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய செயற்பாடுகளினால் எமது தொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றன. அண்மைய நாட்களில் மாத்திரம் எமது கடற்றொழிலாளர்களின் பல மில்லியன் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

எமது கடலுக்குள் அத்துமீறி வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகள் எமது கடற்றொழிலாளர்களை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. இதனால் கடலுக்கு செல்வதற்கே நம்மவர்கள் அஞ்சுகின்றனர். இதனால் எங்களுடைய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பிரச்சினை பல ஆண்டுகளாக தொடர்கின்ற போதிலும் யாராலும் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

எனினும், தற்போதைய கடற்றொழில் அமைச்சர் எமது பிரதேசத்தினை சேர்ந்தவர், எமது பிரச்சினைகளை அறிந்தவர் என்ற அடிப்படையில் காத்திரமாக அணுகுவார் என்று நம்பினோம்.

அவரும் எமக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால் இதுவரை காத்திரமான மாற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. கடற்றொழில் அமைச்சரினால் இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் கட்டுப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையையும் நாம் இழந்து வருகின்றோம்.

அத்துடன், எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது மாத்திரமன்றி எமது கடல் வளத்தினையும் அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் எமது சந்ததியே அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளோம். இதனை தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே, எமது மக்களை அணி திரட்டி போராட்டங்களை நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

அதனடிப்படையில், கட்டம் கட்டமாக மக்கள் போராட்டங்களை விஸ்தரிக்க தீர்மானித்திருக்கின்ற நாங்கள், முதற்கட்டமாக சமூக இடைவெளிகளை மதித்து, கொரோனா சங்கிலிப் போராட்டத்தினையும் நடத்த தீர்மானித்திருப்பதுடன், அடுத்த கட்டமாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தினை முடக்குதல் மற்றும் கடலில் இறங்கி கறுப்புக் கொடிப் போராட்டத்தினை நடத்துவது தொடர்பாகவும் தீவிரமாக சிந்தித்து வருகின்றோம்.

கொரோனா காலத்தில் போராட்டங்களில் ஈடுபடுவது பொருத்தமற்றது என்ற போதிலும் எமக்கு ஏற்படுத்தப்படுகின்ற வாழ்வாதார அச்சுறுத்தல் காரணமாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி போராட்டங்களை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளோம்” என்று தெரிவித்துள்ளனர்.

## மேலும் இரு வாரங்களுக்கு...

நாட்டில் சுற்றுலாத் துறைக்கான சாதகமான சூழலை உருவாக்க வேண்டுமாயின் நாளொன்றுக்கு பதிவாகும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையில் 950 இற்கும் குறைவாக இருக்க வேண்டும் என்பதோடு, கொரோனா பரிசோதனைகளால் உறுதிப்படுத்தப்படும் கொரோனா நோயாளர்களின் வீதம் 2.5 இற்கும் குறைவாக இருக்க வேண்டும்.

பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றி விவசாய மற்றும் வெளிச் சந்தைகளுக்கான அனுமதிகளை பரிந்துரைப்பதோடு, பொது போக்குவரத்து சேவைகள், திருமணங்கள், அழகு நிலையங்கள், உணவகங்கள், களியாட்ட விடுதிகள் மற்றும் பார்களை மீண்டும் திறப்பதற்கு அனுமதி வழங்கக் கூடாது. தற்போதைய முடக்க முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தளர்வு காரணமாக, சரியான பிரதிபலனை பெற முடியாது.

அறுபது வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஏனைய நோய் தாக்கங்கள் உள்ள நோயாளிகளுக்கும் முன்னுரிமை அளித்து சினோபார்ம் தடுப்பூசி வழங்க வேண்டும். அதேபோன்று, ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்ட 12 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியையும் வழங்க வேண்டும்.

ஸ்புட்னிக் இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு அதற்கு பதிலாக பைசர், மொடர்னா அல்லது அஸ்ட்ராசெனிகா தடுப்பூசி வழங்க முடியும். மேலும் அஸ்ட்ராசெனிகா, பைசர் மற்றும் மொடர்னா ஆகிய தடுப்பூசிகளில் முதல் இரண்டு ஊசிகளையும் பெற்றுக்கொண்டவர்களுக்கு 6 மாதங்களுக்குப் பிறகு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருந்த 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மூன்றாவது ஊசி வழங்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கின்றோம் - என்றார்.

## நியூஸிலாந்தில்...

நியூஸிலாந்தில் ஒக்லாந்திலுள்ள விற்பனை நிலையமொன்றில் மக்கள் மீது தாக்குதல் நடத்திய நிலையில் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டவர் காத்தான்குடியைச் சேர்ந்த 31 வயதுடைய முகமது சம்சூதீன் ஆதில் என அரச புலனாய்வுத் துறையினரால் அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து, ஆதிலின் சொந்த ஊரான காத்தான்குடி கபூர்கடை வீதியில் வசித்துவரும் அவரது தாயாரான இஸ்மாயில் சரிதாவிடம் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் இலங்கையைச் சேர்ந்தவர் எனவும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர் என அந்த நாட்டு பிரதமர் அறிவித்திருந்தார். இந்த நிலையில், இவர் தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் அரச புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில் இவர் காத்தான்குடியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காத்தான்குடி கபூர் கடை வீதியைச் சேர்ந்த அதிபரான சம்சூதீன் முகமது - இஸ்மாயில் சரிதா தம்பதிகளுக்கு 1989 ஆம் ஆண்டு கடைசி மகனாக பிறந்த முகமது சம்சூதீன் ஆதில், ஒரு சகோதரி 2 சகோதரர்கள் உட்பட 4 பேரை கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆரம்ப கல்வியை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் பயின்றுள்ளதுடன், நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக குடும்பத்துடன் 1998 ஆம் ஆண்டு ஆதிலுடைய 8 ஆவது வயதில் இடம்பெயர்ந்து கொழும்பு மொரட்டுவைக்கு வந்துள்ளனர்.

இந்த நிலையில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் பயின்றதுடன், 2006ஆம் ஆண்டு பரீட்சை எழுதியதில் 4 புள்ளிகள் குறைவால் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாக முடியாமல் போனது. அதன் பின்னர் 2011 ஆம் ஆண்டு நியூஸிலாந்திற்கு சென்று குடியேறியுள்ளார்.

இவரின் தந்தையார் மாளிகாவத்தை அல் ஹிதாயா பாடசாலையில் 2008 ஆம் ஆண்டு ஓய்வுபெறும் வரை அந்த பாடசாலை அதிபராக கடமையாற்றி வந்தநிலையில், அவரது மகள் கனடாவில் குடியேறிய நிலையில் அவருடன் வாழ்ந்து வருகின்றார்.

அதேவேளை ஒரு சகோதரன் கட்டாரில் திருமணம் முடித்து வாழ்ந்துவருவதாகவும் மற்றுமொரு சகோதரன் சவூதியில் இருப்பதாகவும் தற்போது விடுமுறையில் கொழும்பிற்கு வந்துள்ளதாகவும் கொலன்னாவையில் உள்ள அவரது சொந்த வீட்டை வாடகைக்கு கொடுத்துவிட்டு, காத்தான்குடி கபூர் கடை வீதியிலுள்ள பூர்வீக வீட்டில் வசித்துவருகின்றார்.

இந்த நிலையில் குடும்பத்தில் கடைசிப் பிள்ளையான முகமது சம்சூதீன் ஆரிப் நியூஸிலாந்தில் குடியேறிய பின்னர் அங்கு தங்கியிருக்கும் வீட்டிற்கு அருகில் சிரியா, ஈராக் நாட்டவர்களுடன் தொடர்பைப் பேணியுள்ளார். இது தொடர்பாக அவரிடம் பலமுறை இது கூடாது என தெரிவித்து சண்டையிட்டுள்ளதாகவும் ஆனால் அவர் அதனை கேட்கவில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் அவரது தாயாரின் வாக்குமூலத்தில் தெரியவந்துள்ளது.

நியூஸிலாந்தில் பல்வேறு குற்றச்செயல் காரணமாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி வந்துள்ளதை நியூஸிலாந்து பொலிஸார் கண்டுபிடித்து அவரை பின் தொடர்ந்த நிலையில், சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அரச புலனாய்வு பிரிவினர் மற்றும் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 20 வயதிற்கு

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட 6 இடங்களில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கு, ஜிந்துப்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், போர்ப்ஸ் வீதியில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபம், கெம்பல் பூங்கா, நாரஹேன்பிட்டி ஷாலிகா மண்டபம் மற்றும் வெள்ளவத்தை ரொக்ஸி பூங்கா உள்ளிட்ட பகுதிகளில் இன்று தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

அதேபோல காலி, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிலும் இன்று இந்த தடுப்பூசி வழங்கல் ஆரம்பமாகவுள்ளது. தடுப்பூசி செலுத்தும் நிலையங்களுக்கு சென்று இவற்றை பெறலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா பொதுச் சபையில்...

ஐ.நா பொதுச் சபை கூட்டத்திற்கு வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட்ட உலக அரசியல் தலைவர்களுடன் ஜனாதிபதி கோட்டா சந்திப்புகளை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

தற்போதைய அரசு பதவிக்கு வந்த காலம் முதல் இதுவரை, தமிழர் பிரச்சினை தீர்வு குறித்து எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலைமையில், சர்வதேச அரங்கில் அது பாரிய பேச்சு எழலாமென்பதால் ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்திற்கு முன்னர் தமிழர் தரப்புடன் அரச தரப்பு உள்ளக கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதி தரப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உத்தியோகப்பற்றற்ற ரீதியில் சில பேச்சுகளை நடத்திவரும் நிலையில், அது தொடர்பிலும் ஐ.நாவில் குறிப்பிட ஜனாதிபதி தரப்பு தயாராகி வருகிறது.

இதற்கு மேலாக, கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கு இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி உலக நாடுகளிடம் உதவியை கோருவாரென சொல்லப்பட்டது.

## கொவிட் ஜனாஸாக்களை..

வட்டமடு கிராம கொவிட் 19 விசேட மையவாடியில் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இம் மையவாடியில் சுமார் 4ஆயிரம் ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்படுவதற்கான இடவசதியுள்ளதாகவும் கிண்ணியா பிரதேச சபைத் தவிசாளர் கே.எம்.நிஹார் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், தற்போது மையவாடிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மையவாடிக்குள் 14 உள் வீதிகள் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. மையவாடியைச் சூழ சுமார் 10 கிலோ மீற்றர் மதில் எழுப்பப்படவுள்ளது. மின்சார வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி உட்பட கொவிட் செயலணி அதிகாரிகள் இம்மையவாடியை பார்வையிடவுள்ளனர். ஓட்டமாவடி மஜ்மா நகர் கொவிட் 19 மையவாடியின் நிலப்பரப்பு ஜனாஸாக்களினால் பூரணமாகியுள்ள நிலையில், கிண்ணியா வட்டமடு கிராம மையவாடியை துரிதமாக ஏற்பாடு செய்யும்படி கொவிட் செயலணி வேண்டிக்கொண்டதற்கிணங்க அதன் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன என்றார்.

இதேவேளை புத்தளம் மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் கொவிட் 19 ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு காணிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் கொவிட் 19 செயலணியின் தொழில்நுட்ப குழு இது தொடர்பில் ஆய்வுகளை நடத்தி வருவதாகவும் சுகாதார அமைச்சின் கொவிட் 19 ஒருங்கிணைப்பாளரும் தொழில்நுட்ப சேவைகள் இயக்குனருமான டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

## இன்று கூடுகிறது...

உணவுப் பொருட்களை விநியோகிப்பது தொடர்பிலான அவசரகால ஒழுங்கு விதி மீதான விவாதம் இன்று இடம்பெறவுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்றைய தினம் ரெபிட் அன்ரிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரதான படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பணியாட்தொகுதி ஊழியர்களுக்கும் நாடாளுமன்ற செய்தியாளர்களுக்கும் அன்ரிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்வாறு அன்ரிஜன் பரிசோதனைகள் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 06.09.2021 திங்கட்கிழமை - ஆவணி 21**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: மகம்**
மாலை 5.51 வரை
**பூரம்**
மாலை 5.51 - 07.09.2021
மாலை 5.05 வரை
**யோகம்: சிவம்**
காலை 6.54 வரை

**சித்தம்**
காலை 6.54 - 07.09.2021
அதிகாலை 4.48 வரை
**திதி: அமரபட்ச சதுர்த்தசி**
காலை 7.38 வரை
**அமாவாசை**
காலை 7.38 - 07.09.2021
காலை 6.21 வரை

**கரணம்: சகுனம்**
காலை 7.38 வரை
**சதுஷ்பாதம்**
காலை 7.38 - இரவு 7.04
**நாகவம்**
இரவு 7.04 - 07.09.2021
காலை 6.21 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.07 - 7.35
மாலை 4.41 - 6.10

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
காலை 7.37 - 9.09

**குளிகை காலம்**
பிற்பகல் 1.41 - 3.13
**எமகண்ட காலம்**
காலை 10.39 - பி.ப 12.10
**துர் முகூர்த்தம்**
பிற்பகல் 12.33 - 1.22
மாலை 3.00 - 3.49

**லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேடம்**
பணிகளில் தாமதமும், உற்சாக குறைவும் ஏற்படலாம். இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும்.காதலர்களின் உறவில் அதிக ஈர்ப்பு ஏற்படலாம்.

**ரிஷபம்**
பெண்கள் உடல்நலத்தில் கவனம் பேண வேண்டும். மனதில் மகிழ்ச்சி குறைவும், நிதி நிலை காரணமாக சில வேலைகளின் நிறைவேற்ற இயலாமையும் ஏற்படலாம்

**மிதுனம்**
பிள்ளைகளின் கல்வி கற்பிப்பவர்களின் வழிகாட்டுதலில் மேம்படும். சில கௌரவம் கிடைக்க பெறலாம். அரசாங்க பணிகளுக்கு சுப செய்திகள் கிடைக்கக்கூடும்

**கடகம்**
வணிகத்தின் பண நிலைமைகளில் கவலைகள் உருவாகலாம். ஆழ்ந்த ஆய்வுக்கு பின் சிலரில் நம்பிக்கை வைப்பது நன்மை. செமிபாட்டு குறைவு ஏற்படலாம்.

**சிம்மம்**
இறை தியானத்தால் நேர்மறை எண்ணங்கள் உருவாகும். வேலைத்தளங்களில் அனுபவ திறமையால் பணிகள் சிறப்புறும். வியாபார ஒப்பந்தங்கள் கிடைக்கலாம்.

**கன்னி**
தம்பதியரிடையே மகிழ்ச்சி நிலவும். உங்களைப் பற்றிய பிறரின் தேவையற்ற கருத்துகளையும், விமர்சனங்களையும் புறம் ஒதுக்கி மனதில் இறையை நிறுத்தினால் வெற்றிஉண்டாகும்.

**துலாம்**
பணிகளில் முயற்சியால் திறமை, பணி நிறைவேற்றம் உண்டாகும். உடல்நலக் குறைவுகள் நீங்க துவங்கும். வீட்டில் இருப்பவர்களின் அன்பும், ஆதரவும் உற்சாகம் தரும்.

**விருச்சிகம்**
நிதி பிரச்சினைகள் குறைய துவங்கும். உடல் நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். பெண்களால் உதவிகள் உண்டாகும்.

**தனுசு**
வணிகத்தில் சிறந்த திறமையும், பரம்பரை வியாபாரத்தில் இலாப அதிகரிப்புகளும் ஏற்படலாம். பண விடயங்களில் சில அதிர்ஷ்டம் கிடைக்க பெறலாம். வேலைத்தளங்களிலும் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்**
பணிச்சுமை, வேலைகளில் கவனமின்மை ஏற்படலாம். தேவையற்ற, அவசரமற்ற பயணங்களை தவிர்ப்பது நன்மை. பிறரிடம் பேசும்போது சொற்களில் கவனம் தேவைப்படலாம்.

**சந்திராஷ்டமம்:**
**உத்தராடம் நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு காலை 11.59 வரை**
**திருவோணம் நட்சத்திரத்திற்கு காலை11.59 -07.09.2021 காலை 11.19 வரை**

**கும்பம்**
வணிகத்தில் அதிக மகிழ்ச்சி நிலவும். திருமண விடயங்களில் சுப செய்திகள் கிடைக்கக்கூடும். இன்று நல்ல நாளாக அமையலாம்.

**மீனம்**
வேலைகளில் சிறிய பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பணி சிறப்பாக நிறைவேறும். நிதி நிலைமை விடயங்களில் தம்பதியரிடையே சகிப்புத்தன்மை தேவை. இறைவணக்கம் நன்மை தரும்.

# எதிர்காலத்தில் மேலும் வீரியம்மிக்க கொரோனா திரிபுகள் உருவாகலாம்!

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண எம்.பி. எச்சரிக்கை



நாட்டில் தற்போதுள்ளதை விட மேலும் வீரியம்மிக்க கொரோனா திரிபுகள் எதிர்காலத்தில் உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் விளக்கமளிக்கையில்,

தற்போது நிலவும் கொரோனா பரவல் நிலைமையை, தடுப்பூசிகளைக் கொண்டு 95 சதவீதத்தால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். ஆனால், எதிர்காலத்தில் புதிதாக உருவெடுக்கும் கொரோனா திரிபுகளுக்கு புதிதாக தடுப்பூசிகள் தயாரிக்க வேண்டி ஏற்படும்.

இந்த கொரோனா தொற்று வௌவாலில் இருந்து பரவலடைவதாக ஒருசில நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். எது எவ்வாறாயினும் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்ற வேண்டியது சகலரதும் கடமையாகும்.

எமது பாதுகாப்பை நாமே உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் புதிய சிகிச்சை கட்டடம் திறந்துவைப்பு





(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

டிக்கோயா, கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொரோனா சிகிச்சை நிலைய கட்டட திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு மற்றும் இலங்கை ஆறுநாட்டு வேலாளர் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த புதிய கட்டடமானது, வைத்தியர்கள், தாதியர்களுக்கான ஓய்வறைகள், நோயாளர்களுக்கான உணவு விடுதி, 28 கட்டில்கள் உள்ளிட்ட சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் உள்ள கொவிட் 19 நோயாளர் சிகிச்சை வார்ட்டில் இட நெருக்கடி காரணமாக வைத்தியசாலை நிர்வாகத்தினரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க 80 இலட்சம் ரூபா செலவில் இந்த சிகிச்சை நிலைய புதிய கட்டடம் அமைத்து கையளிக்கப்பட்டது. சுகாதார விதிமுறைகளோடு இடம்பெற்ற இந் நிகழ்வில் இலங்கை ஆறுநாட்டு வேலாளர் சபையினர் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினரும் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் இருவேறு விலையில் கோதுமை மா விற்பனை

## மக்கள் விசனம்

வவுனியா மாவட்டத்தில் 100 ரூபா மற்றும் 115 ரூபா என இருவேறு விலையில் கோதுமை மா விற்பனை செய்யப்படுகின்றது. ஆனாலும், மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் இத தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இருவேறு விலைக்கு விற்பனை செய்யப்படும் கோதுமை மா பையில் ஒரே பொதியிடல் இலக்கமாக இருந்தாலும், ஒரு மா பையில் 100 ரூபா என அச்சிடப்பட்டுள்ளது. மற்றைய மா பையில் 100 ரூபா என்பதை அழித்து 115 ரூபா என எழுதப்பட்டுள்ளது.

வவுனியா பஜார் வீதியிலிருந்து மக்களுக்கு கோதுமை மா விநியோகம் செய்யும் குறித்த நிறுவனத்தினாலேயே இவ்வாறான விலை மாற்றம் செய்து சிறிய வர்த்தக நிலையங்களுக்கு விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினருக்கு உயர் அதிகாரிகளின் அழுத்தம் காரணமாகவா இவற்றினை கண்டும் காணாதும் செயற்படுகின்றனர் என பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,59,459 | 67,032 | 3,82,476 | 3,333 | 9,951 |

# தமிழக கடல் வழியாக 59 இலங்கையர் கனடாவுக்கு தப்பிச்செல்ல முயற்சி

## அடைக்கலம் கொடுத்தமை தொடர்பில் தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை

(மன்னார் நகர் நிருபர்)

தமிழக கடல் வழியாக கனடாவுக்கு தப்பிச்செல்ல முயன்ற இலங்கை தமிழர்களுக்கு, அடைக்கலம் கொடுத்தவர்கள் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு நேற்று முன்தினம் (04) மாலை இராமநாதபுரத்தில் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இலங்கை புத்தளம் பகுதியைச் சேர்ந்த 24 ஆண்கள், 2 பெண்கள், ஒரு குழந்தை என 27 பேர் படகு ஒன்றின் மூலம் கடல் வழியாக கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி தூத்துக்குடி பிரதேசத்தைச் சென்றடைந்துள்ளனர்.

கேரளா வழியாக கனடா செல்ல திட்டமிட்டு மதுரையில் தங்கியிருந்த 27 பேரையும் இராமநாதபுரம், மதுரை கியூ பிரிவு பொலிஸார் கைதுசெய்துள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதன் பின்னர் இவர்கள் 27 பேரும் புழல் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கையிலிருந்து கனடா தப்பிச் செல்ல மங்களூருவில் பதுங்கியிருந்த இலங்கை தமிழர் 32 பேரை மங்களூர் கியூ பிரிவு பொலிஸார் ஜூன் மாதம் 11ஆம் திகதி மாலை கைதுசெய்துள்ளனர்.

இவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே மரைக்காயர் பட்டணத்தில் சிலர் அடைக்கலம் கொடுத்து வேதாளை கடற்கரையிலிருந்து படகில் இலங்கைக்கு தப்பிச்செல்ல உதவியதாக விசாரணையில் தெரியவந்தது.



அதன்படி இலங்கை தமிழர்கள் சிலரை மங்களூரு தனிப்படையினர் ஜூன் மாதம் 20ஆம் திகதி அழைத்து வந்து வேதாளை கடல் பகுதியில் நேரடி விசாரணை மேற்கொண்டனர். பல்வேறு கோணங்களில் தொடர்ந்து நடைபெற்று வந்த இந்த விசாரணை, தேசிய புலனாய்வு அமைப்பிற்கு சமீபத்தில் மாற்றப்பட்டது. அதிகாரி சண்முகம் தலைமையில் ஒரு குழுவினர் நேற்று முன்தினம் (04) இராமநாதபுரம் சென்றுள்ளனர். மண்டபம் அருகே வேதாளை, சீனியப்பா தர்கா உள்ளிட்ட கடற்கரை பகுதிகளை பார்வையிட்டனர். இலங்கை தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாக சந்தேகிக்கப்பட்ட ஒருவரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

# தோட்டக் காணிகளை தனியாருக்கு விற்க சதி முயற்சி

## ஓரணியில் இணையுமாறு மலையக சிவில், நலன்புரி அமைப்புகளுக்கு வேலுகுமார் எம்.பி. அழைப்பு

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி என்ற பதாதையை வெளியில் காண்பித்துக்கொண்டு, வெளிநபர்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் தோட்டப் பகுதிகளில் உள்ள காணிகளை வழங்கும் நடவடிக்கை மிகவும் சூட்சுமமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சும் துணைநிற்கின்றது என்பதை மிகவும் உறுதியாக கூறிக்கொள்கின்றேன். இந்த இரகசிய கொடுக்கல் - வாங்கல்களை மூடிமறைப்பதற்காகவே மறுப்பறிக்கைகளும், ஊடக சந்திப்புகளும் இராஜாங்க அமைச்சின் சகாக்களால் நடத்தப்பட்டு வருகின்றன - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரால் நேற்று விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1972 இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சியின்போது மலையக பெருந் தோட்டப் பகுதிகளில் உள்ள காணிகள் சுவீகரிக்கப்பட்டன. மாற்று குடியேற்றங்களும் இடம்பெற்றன. இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்பட்டன. அன்று மலையக மக்கள் சார்பில் செயற்பட்ட அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் அரசாங்கத்தின் செயற்பாட்டை கடுமையாக எதிர்த்தன. ஆனால் இன்று என்ன நடக்கின்றது? பெருந்தோட்டங்களை பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்ட தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின், இராஜாங்க பிரிவானது காணிகள் பறிபோவதற்கு துணைநிற்பதுடன்,



வெளியாருக்கு காணிகளை வழங்குவதற்கு தரகர் வேலையும் பார்க்கின்றது.

இதனை தடுத்து நிறுத்தி, எமது மக்கள் வளமாக்கிய மண்ணை அவர்களுக்கே சொந்தமாக்கி, அவர்களை சிறுதோட்ட உரிமையாளர் என்ற நிலைக்கு கொண்டு வருவதற்கு நாம் பாடுபடுகின்றோம். இதனை சகித்துக்கொள்ள முடியாததாலும், தரகுப்பணம் கிடைக்காது என்பதாலுமே தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் சகாக்கள், இன்று கொக்கரிக்க ஆரம்பித்துள்ளனர். எதுவுமே நடக்கவில்லை, எதிரணி உறுப்பினர் கூறுவதெல்லாம் பொய்யென அறிக்கைகளையும் விடுத்துவருகின்றனர்.

அரச பெருந்தோட்ட யாக்கத்துக் குட்பட்ட பயிரிடப்படாத நிலங்களை, விவசாய நடவடிக்கைக்கு விடுவிக்குமாறு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த அமைச்சின் இராஜாங்க அமைச்சராக ஜீவன் தொண்டமானே செயற்படுகின்றார். அதாவது தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்க என்ற போர்வையில் அவர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியை வழங்கிவிட்டு, ஏனையவற்றை வெளியாருக்கு விற்பனை செய்வதே இதன் உள்நோக்கமாக இருக்கின்றது.

எனவே, இவ்வாறானவர்களின் சதி முயற்சிகளை முறியடித்து எமது காணியை எம்மக்களுக்கே கொடுப்பதற்கான திட்டம் வெற்றியளிக்க ஓரணியில் திரள்வோம் என மலையகத்திலுள்ள அனைத்து சிவில் மற்றும் நலன்புரி அமைப்புகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். அதேபோல மக்களுக்காக மக்கள் அரசியலை முன்னெடுக்கும் நாம் சட்டத்தை மதிக்கின்றோம். மனசாட்சியின் பிரகாரம் செயற்படுகின்றோம்.

எத்தடை வந்தாலும் அவற்றை தகர்த்தெறிந்துவிட்டு மக்களுக்காக முன்னோக்கி பயணிப்போம். எனவே, பூச்சாண்டி அரசியல்மூலம் எம்மை கட்டுப்படுத்த முடியாது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, செப்டெம்பர் 06ஆம் திகதி, திங்கட்கிழமை

# அம்பலமாகும் அரசின் உண்மை முகம்

நீதி அமைச்சர் அலி சப்ரி காணாமல் போனோர் தொடர்பாக வெளியிட்டுள்ள சில கருத்துகள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிச்சமிட்டுக் காட்டியுள் ளன.

“ஒருவர் காணாமல் போயிருந்தால் அவர் என்ன காரணத்திற்காகக் காணமல் போனார் என்பதை விசாரிக்கத் தேவை இல்லை. அது விடயத்தில் குற்றம் ஏதும் நடந்துள்ளதா என்பதையும் பார்க்காதீர்கள். அதை மறந்து விடுங்கள். அவர் ஏன் காணாமல் போனார் என்றும் தேடாதீர்கள். அவர் எந்தப் பக்கம் என்றும் பார்க்காதீர்கள். அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, காணாமல் போனவர் இலங்கை நாட்டவர் என்ற அடிப்படையில் அதனால் ஏற்பட்ட வலியை உணர்ந்துகொண்டு, உரிய இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்பதையே ஜனாதிபதி அமைச்சரவையிலும் வெளியிலும் எங்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறி வருகிறார் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோருக்கான சர்வதேச தினம் குறித்து கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அமைச்சர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

“காணாமல் போனோர் தொடர்பான விடயத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவாக இருக்கிறார். நீதி அமைச்சர் என்ற ரீதியில் நானும் இந்த விடயத்தில் எனது பூரண பங்களிப்பை வழங்கி வருகிறேன். முன்னைய அரசாங்கத்தைப் போலல்லாது காணாமல்போனோர் அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றை நீதி அமைச்சர் என்ற வகையில் நானும் வெளிவிவகார அமைச்சும், கலாநிதி சுரேன் ராகவன் எம்.பியும், காமினி வெலேபொட எம்.பியும் தொடர்சியாகக் கண்காணித்து, இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகிறோம். காணாமல் போனவர் என்ன காரணத்திற்காகக் காணாமல் போனார் என விசாரிக்கத் தேவை இல்லை என ஜனாதிபதி கூறியுள்ளார்.

காணாமல் போனவர் ஓர் இலங்கைப் பிரஜை என்பதனை ஏற்று அதனால் அவரின் உறவுகளுக்கு ஏற்பட்டுள்ள வலியைப் புரிந்து கொண்டு, அதிலிருந்து பாடம் படித்து, அது மீள நிகழாமையை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவைக் கூட்டத்தில் எங்களுக்குத் திரும்பத் திரும்ப வலியுறுத்திய விடயம் இவ்விவகாரத்தில் குற்றம் ஒன்று நடத்திருந்தால் அதை மறந்து விடுவோம்.

யாராவது ஒருவர் காணாமல் போயிருந்தால் அவர் எந்த இனம், என்ன மொழி எந்தப் பக்கம் என ஆராயத் தேவையில்லை. இலங்கைப் பிரஜை எனப் பார்ப்போம். அந்த குடும்பங்களின் வலியைப் புரிந்துகொண்டு, நிலையை கருத்தில்கொண்டு, இழப்பீடு கொடுப்போம்.

யுத்தம் முடிவுபெற்று 12 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்னும் காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பது, எமது நாடு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் முன்செல்லமுடியாமல் இருப்பதற்குக் காரணமாக உள்ளது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என எல்லாத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் எத்தகைய சூழ்நிலையில், எப்படிக் காணாமல் போனார் என்பதைப் பார்ப்பதைவிடுத்து, அவர் காணாமல்போனார் என்பதை மட்டும் அடையாளம்கண்டு இழப்பீட்டை செலுத்துவோம்.

இதேநேரம் காணாமல் போனோருக்காக இழப்பீடு வழங்கினால் அரசு குற்றத்தை ஒப்புக்கொண்டதாக அர்த்தம் இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு மரணச்சான்றிதழ், நஷ்டஈடு மட்டும் வழங்காது,பொது மன்னிப்பு ஒன்றை கேட்பதாலும் வழங்குவதாலுமே இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரமுடியும். சர்வதேச ரீதியில் அவ்வாறே இது மாதிரியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன” என நீதி அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்துள்ளார்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பன்னிரு ஆண்டுகளாக நீதி வேண்டி போராட்டம் நடத்திவருகிறார்கள். தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ளும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது.

ஆனால், இந்த விடயத்தில் இத்தனை காலமும் அமைதியாக இருந்த ஆட்சியாளர்களின் மனதில் என்ன இருக்கிறது என்பது இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

காணாமல்போனமைக்கான காரணத்தை தேட வேண்டாம் என ஓர் அரச தலைவர் சொல்வாராயின் அதற்கான பின்புலமும் காரணமும் ஆராயப்பட வேண்டும். யுத்த காலத்தில் ஆட்சியிலிருந்தவர்களும் போரை வழிநடத்தியவர்களும் தற்போது ஆட்சியாளர்களாக இருக்கையில், இவ்வாறான கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றமை சந்தேகத்தை உண்டுபண்ணுவதை தவிர்க்க முடியாததாகும்.

கண்ணீருடன் நியாயத்துக்காக போராடும் மக்களுக்கு பொறுப்புள்ள அரசாங்கம் கூறும் பதில் இதுதானா? காணாமல் போனமைக்கான காரணத்தை தேடி உண்மைகளை வெளிப்படுத்தினால் என்ன? யாருக்கு அஞ்சி அரசாங்கம் நடந்ததை மறைக்க முயற்சிக்கிறது? அல்லது போலி முகத்திரை கிழிக்கப்பட்டுவிடுமா என்ற அச்சமா காரணம்?

இந்த விடயத்தில் குற்றம் ஒன்று நடந்திருந்தால் அதனை மறந்துவிடுவோம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளதாக நீதி அமைச்சர் குறிப்பிடுகிறார். குற்றம் நடந்தது என்றால் அதனை மேற்கொண்டோருக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பது யார்? மறந்துவிடுவோம் என்றால் குற்றத்துக்கு துணைபோனதாகத்தானே அர்த்தப்படுகிறது?

இவ்வாறான விடயங்களைப் பார்க்கும்போது ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் வெளிப்படைத் தன்மை இல்லையென்பதே புரிகிறது. காணாமலாக்கப்பட்டோர் விடயத்தை சாதாரணமாக எடுத்துக்கொண்டு நஷ்டஈடு கொடுத்து பிரச்சினையை தீர்த்துவிட முடியாது.

உண்மைத்தன்மையும் நியாயமும் வெளிப்படுத்தப்படும் வரை தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருக்கும் சந்தேகப் பார்வையை ஒருபோதும் அகற்றிவிட முடியாது.



# இந்தியாவுக்கு எதிரான அரசியல் வலையில் இணையுமா ஆப்கானிஸ்தான்





ஆசியாக் கண்டத்தில் மிக நீளமான பதற்றை எல்லையைக் கொண்டது இந்தியா. இந்தியாவின் அண்டை நாடுகளான சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றின் எல்லைகள் எப்பவுமே பதற்றமானவையாக உள்ளன. திபெத்தின் ஒரு பகுதியை சீனாவும், காஷ்மீரின் ஒரு பகுதியை பாகிஸ்தானும் ஆக்கிரமித்ததால் அவையும் பதற்றமான எல்லைகளான உள்ளன. இந்தியாவின் எல்லை நாடுகளான நேபாளம், திபெத் ஆகிய நாடுகளிலும் சீனா கால் பதித்துள்ளது. இலங்கைக்கும் சீனாவுக்கும் உள்ள நட்பையும், இந்திய - இலங்கை அரசியல் உறவையும் பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்தக் கூட்டணியில் ஆப்கானிஸ்தானும் இணைந்து விடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் ஆட்சி செய்தபோது இந்தியாவுக்கு அச்சுறுத்தல் இருந்தது. ஆப்கான் மீதான அமெரிக்காவின் படையெடுப்பால் தலிபான்கள் வெளியேற்றப்பட்டனர். கடந்த ஆண்டுகளாக சுமுகமாக இருந்த ஆப்கான், இந்திய எல்லையில் பதற்றம் ஏற்படும் சூழ்நிலை உண்டாகியுள்ளது. தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் சமீபத்தில் முழுமையாக வெளியேறின. இதையடுத்து தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தான் வந்துள்ளது.

தலிபான் தலைவர்களில் ஒருவரான அனஸ் ஹக்கானி, சி.என்.என் நியூஸ் 18-க்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில் “காஷ்மீர் விவகாரத்தில் தலையிடமாட்டோம், இந்தியாவுடன் சுமுகமான உறவையே வேண்டுகிறோம்” என தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றியிருக்கும் தலிபான்கள், உலக நாடுகளுடன் உறவை பேணுவதில் அக்கறை கொண்டிருப்பதாக காட்டிக்கொள்கின்றனர். குறிப்பாக ஆசிய பிராந்தியத்தில், இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட அண்டை நாடுகளுடன் தங்களின் நட்பை பலப்படுத்துவதில் அக்கறை கொண்டிருப்பதாக கூறுகின்றனர். தலிபான்கள் வேண்டுகோளை ஏற்று கட்டார் நாட்டின் தலைநகரான டோஹாவில் உள்ள இந்திய தூதரகத்தில் தலிபான் பிரதிநிதியை வரவழைத்து அதிகாரபூர்வ பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது இந்தியா.

இந்த பேச்சுவார்த்தையின் போது ஆப்கான் மண்ணை தீவிரவாதத்துக்காகவும், இந்தியாவுக்கு எதிரான செயல்களுக்காகவும் பயன்படுத்தக் கூடாது என இந்தியா தனது நிலைப்பாட்டை தலிபான்களிடம் எடுத்துரைத்திருக்கிறது. தலிபான்களால் தலையிடி வராது என இந்தியா தன்னை ஆசுவாசப்படுத்துவதற்கிடையில் அல்-கொய்தாவின் அறைகூவல் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிலிருந்து அமெரிக்கப் படைகள் முழுமையாக வெளியேறியவுடன், சர்வதேச பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் உள்ள அல் - கொய்தா வெளியிட்ட அறிக்கையில், உலகில் அடுத்தவர்கள் ஆதிக்கத்தில் உள்ள இஸ்லாமிய நிலங்களை மீட்க ஜிகாத் எனப்படும் புனிதப் போர் நடத்த வேண்டும் எனக் கூறியிருந்தது. இஸ்லாமிய நிலங்கள் என அவர்கள் குறிப்பிட்டிருந்த பகுதிகளில் இந்தியாவின் பகுதியான ஜம்மு - காஷ்மீரும் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில், மேற்காசியாவில் கட்டார் நாட்டின் தலைநகர் டோஹாவில் தலிபான் செய்தி தொடர்பாளர் சுஹைல் ஷாஹீன் பிபிசி உருது தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: “உலக நாடுகளுக்கு நாங்கள் தெரிவிப்பது என்னவென்றால் முஸ்லிம்களை உங்கள் சொந்த மக்களாக கருதுங்கள். உங்கள் சட்டப்படி அனைத்தையும் பெற முஸ்லிம்களுக்கும் உரிமை உள்ளது. நாங்களும் முஸ்லிம் என்பதால் காஷ்மீர் உட்பட உலகளவில் முஸ்லிம்கள் எங்கு வசித்தாலும் அவர்களின் பிரச்சினைக்கு ஆதரவாக குரல்கொடுப்போம். அதே சமயம் எந்த நாட்டிற்கு எதிராகவும் ஆயுதம் ஏந்தி போராட மாட்டோம்” எனத் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் தனக்கு மிகவும் நெருக்கமான, நட்புறவு நாடாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இந்தியா, அங்கு பல அபிவிருத்திகளுக்கு பணத்தை அள்ளிக் கொடுத்தது. நவீன நாடாளுமன்றம் அமைத்ததில் பெரும் பங்கு இந்தியாவினுடையது. விமான நிலையங்கள், சாலைகள் என்பவற்றின் அபிவிருத்தியில் பாகிஸ்தான் உள்ளே நுழைந்து விடக்கூடாது என்பதே இந்தியாவின் நோக்கம்.



ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் இருந்தபோது பக்ராம் விமானப் படைத்தளமே முக்கிய தளமாக இருந்தது. தற்போது அந்த விமானப் படைத்தளத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சீனா நிச்சயம் முயற்சிக்கும். இந்தப் பகுதி பாகிஸ்தானுக்கு அருகில் உள்ளது. இலங்கையின் தெற்கே அம்பாந்தோட்டையில் இருந்து வடக்கில் உள்ள தீவுகள் வரை சீனா கால் பதித்துள்ளது. இதனால் சிக்கல்கள் அதிகரிக்கும் என இந்தியா நம்புகிறது.

ஆப்கானிஸ்தான் உடனான நட்புறவை மேம்படுத்த பல நூறு கோடி ரூபா முதலீடு செய்து வந்தது. ஆனால் கடந்த ஒரு வருடமாக இதன் அளவீட்டைக் குறைத்தது ஆப்கானிஸ்தான் நாட்டின் முதலீட்டைக் குறைத்த இந்திய அரசு, ஏப்ரல் மாதம் ஹெராட், ஜலாலாபாத் பகுதியில் செயல்பட்டு வந்த இந்திய அரசின் திட்டங்களை மூடிவிட்டு இந்திய அதிகாரிகளைத் திரும்ப அழைத்தது. கடந்த ஒகஸ்ட் மாதம் கந்தகார், மசார் ஆகிய பகுதியில் இருந்த இந்திய தூதரகத்தை மூடியது. இதனால் காபூல் நகரத்தில் இருக்கும் தூதரகம் மட்டும் இயங்கி வந்தது. இப்போது அதுவும் மூடப்பட்டு விட்டது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதால், இந்தியா - ஆப்கானிஸ்தான் மத்தியில் செய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியா ஆப்கானிஸ்தான் நாட்டில் இந்தியா செய்த முதலீடுகள் மூலம் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்த புதிய வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் தற்போது ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதால் இல்லாமல் போய்விட்டது.

ஆப்கானிஸ்தானில் பெரும்பாலான ஏற்றுமதிகள் விமானம் மூலமாகவே செய்யப்படுகின்றன. இந்த நிலையை மாற்றவே இந்தியா ஆப்கானிஸ்தானில் சாபஹார் துறைமுகத்தைக் கட்டமைக்க முதலீடு செய்தது. ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்து இந்தியாவிற்கு உலர்ந்த திராட்சை, வால்நட், பாதாம், அத்தி, பைன் நட், பிஸ்தா, உலர்ந்த ஆப்பிரிகாட் மற்றும் பழங்களான ஆப்பிரிகாட், செர்ரி, தர்பூசணி மற்றும் சில மருத்துவக் குணம் நிறைந்த மூலிகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதேபோல் இந்தியாவிலிருந்து ஆப்கானிஸ்தான் நாட்டிற்கு தேயிலை, கோப்பி, மிளகு, பருத்தி மற்றும் இதர வர்த்தகப் பொருட்களும் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவை அனைத்தும் தற்போது முடக்கப்பட்டுள்ளன.

தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தன் படைகளை திரும்பப் பெற்றுள்ளது. இது குறித்து ஐ.நா.வுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதர் நிக்கி ஹாலே கருத்துத் தெரிவிக்கையில்,

“ஆப்கானிஸ்தானில் இருந்து படைகளை திரும்பப் பெற்றதன் வாயிலாக பெரும் வரலாற்று தவறை ஜனாதிபதி ஜோ பைடன் செய்துள்ளார். படைகளை திரும்பப் பெற்றதால் போர் முடிந்துவிட்டதாக கூறுகிறார். ஆனால் இனிதான் நிலைமை மோசமாகப் போகிறது. இனி இந்த உலகம் மிகப் பெரும் ஆபத்தை சந்திக்கவுள்ளது. உலகெங்கும் உள்ள பயங்கரவாதிகள் இனி வலு பெறுவர். படைகளை திரும்பப் பெற்றதன் வாயிலாக அமெரிக்க இராணுவ வீரர்களின் நம்பிக்கையை பைடன் இழந்துள்ளார். வீரர்களின் திறமையை அவர் குறைத்து மதிப்பிட்டுள்ளார். இதனால் வீரர்களுடன் அவர்களுடைய குடும்பத்தாரும் அதிருப்தியில் உள்ளனர். சர்வதேச அரங்கில் நம் நாட்டுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளார். இதனால் அமெரிக்க மக்களின் நம்பிக்கையையும் பைடன் இழந்துள்ளார்” எனத் தெரிவித்துள்ளார்.

சீனா, பாகிஸ்தான் எல்லைகளின் கேட்கும் குண்டுச் சத்தங்களால் அப்பகுதி மக்கள் தூக்கத்தையும் நிம்மதியையும் இழந்துள்ளனர். திபெத்தின் ஒரு பகுதியை சீனாவும், காஷ்மீரின் நிலப் பகுதியை பாகிஸ்தானும் கைப்பற்றியதால் அந்த எல்லைகள் கடுமையான கண்காணிப்பில் உள்ளன. உலகின் சனத்தொகையைக் கொண்ட முதல் இரு நாடுகளாக சீனாவும், இந்தியாவும் உள்ளன. ஆசியாவில் பலமான படைகளைக் கொண்ட இரு நாட்டு எல்லைகளிலும் முட்டலும் மோதலும் சர்வசாதாரணமாக உள்ளன. ஆப்கான் இந்திய எல்லையிலும் இனிமேல் குண்டுச் சத்தங்கள் கேட்கும் நிலை உருவாகப் போகிறது. இதனை இராஜதந்திர ரீதியாக செயற்படுத்த வேண்டிய நிலையில் இந்தியா உள்ளது.

**-ரமணி-**

# 68 மில்லியன் ரூபா பெறுமதியான 227 கிலோ கேரள கஞ்சா கடற்படையினரால் மீட்பு





வெத்தலக்கேனி, அலியவெலி பிரதேசத்தை அண்மித்த கடற்பரப்பில் நேற்று காலை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 227 கிலோ 400 கிராம் கேரள கஞ்சா தொகை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெத்தலகேனி, அலியவெலி பிரதேசத்தை அண்மித்த கடற்பரப்பிலிருந்து கரையை நோக்கி வந்துகொண்டிருந்த சந்தேகத்துக்கிடமான படகொன்றை பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே இந்த கேரள கஞ்சா தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

கரையோரத்துக்கு கொண்டுவர முடியாமல் கடல் பகுதியில் சந்தேகநபர்கள் இந்த கேரள கஞ்சா தொகையை கைவிட்டுச் சென்றுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இந்த கேரள கஞ்சா தொகை 05 பைகளில் 100 பொதிகளாக அடைக்கப்பட்டிருந்ததாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த கேரள கஞ்சாவின் சந்தை பெறுமதி 68 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது. சுகாதார விதிமுறைகளுக்கமைய இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா தொகை தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது. இதன்போது கைப்பற்றப்பட்ட படகு அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படும் வரை கடற்படையினரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது.

# 30 லீற்றர் கள்ளச்சாராயத்துடன் சந்தேக நபரொருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கெருடாவில் பகுதியில் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 30 லீற்றர் கள்ளச்சாராயத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

கெருடாவில் காட்டுப் பகுதியில் கள்ளச்சாராயம் உற்பத்தி செய்யப்படுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, முப்பது லீற்றர் கள்ளச்சாராயம் மற்றும் கள்ளச்சாராய தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

32 வயதான சந்தேகநபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பழங்குடி தலைவரின் மனைவி கொவிட்டினால் உயிரிழப்பு



(கண்டி)


கொவிட் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மஹியங்கனை தம்பானே பழங்குடி தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோவின் மனைவி ஹீன் மெனிக்கே (வயது 64) நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கொவிட் தொற்றுக்குள்ளாகிய நிலையில் அவர் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நிமோனியாவிற்கான சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே பேராதனை மருத்துவமனைக்கு கடந்த 2ஆம் திகதி மாற்றப்பட்டார். தீவிர சிகிச்சைப் பிரிவில் விசேட கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இவர் ஒன்பது பிள்ளைகளின் தாயாவார். இவரது குடும்பத்தைச் சேர்ந்த பலரும் கடந்த 29 ஆம் திகதி கொவிட் தொற்றுக்குள்ளாகி மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கண்டி தலதா மாளிகையின் எசல பெரஹராவின் முக்கிய அங்கமான ரந்தோலி பெரஹராவில் ஒரு நிகழ்வாக தேன் பூஜை இடம்பெறும். அதிலும் ஹீன் மெனிக்கே மற்றும் வன்னியலத்தோ குழுவினர் கலந்து கொண்டனர். அத்துடன் அன்று (கடந்த 18ஆம் திகதி) ஸ்ரீதலதா மாளிகையில் புனித சின்னத்தையும் வழிபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கை மீறிய 17 முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் கைது



(தலவாக்கலை நிருபர்)


தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி தலவாக்கலை நகரில் பயணித்த 17 முச்சக்கர வண்டிகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவற்றின் சாரதிகளும் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊரடங்கு காலத்தில் எந்தவிதமான காரணமுமின்றி முச்சக்கர வண்டிகள் வீதிகளில் பயணித்துள்ளன. தலவாக்கலை, அக்கரப்பத்தனை மற்றும் திம்புள பத்தனை பகுதிகளைச் சேர்ந்த முச்சக்கரவண்டிகளே இவ்வாறு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தலவாக்கலை பொலிஸாரினால் மேற்கொண்ட வீதி சோதனை நடவடிக்கையின் போதே இந்த முச்சக்கரவண்டிகள் கைப்பற்றப் பட்டுள்ளன. முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து எதிர்வரும் 14 ஆம் திகதி நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

# தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத நால்வர் கொரோனாவுக்கு பலி



வவுனியாவில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத நான்கு பேர் கொரோனா தொற்று காரணமாக நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் பலரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் கொரோனா தொற்று காரணமாக கொரோனா தடுப்பூசி எதனையும் பெற்றுக் கொள்ளாத 32 வயதுடைய நபரொருவர் உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏனைய மூவரும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களாவர். குறித்த நால்வரது சடலங்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மின்னல் தாக்கி உயிரிழந்த பஸ் சாரதியின் இறுதிச்சடங்கில் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் பங்கேற்பு



மின்னல் தாக்கி உயிரிழந்த போக்குவரத்து சபையின் பருத்தித்துறை வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் சாரதியின் இறுதிச்சடங்கு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த இறுதிச் சடங்கில் பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்டிருந்தனர்.

அச்சுவேலி, நாவற்காட்டை சேர்ந்த தியாகராசா மதனபாலன் (வயது 43) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 2ஆம் திகதி அவர் மின்னல் தாக்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அஞ்சலிக்காக சடலம் அல்வாயில் வைக்கப்பட்டு பின்னர், அச்சுவேலிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நாவற்காட்டிலுள்ள வீட்டில் சடலம் வைக்கப்பட்டு, அச்சுவேலி முழக்கன் மயானத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். மயானம் வரை அவர் செலுத்திய பஸ்ஸூம் கொண்டு செல்லப்பட்டது.

வீட்டிலிருந்து சில நூறு மீற்றர் தொலைவிலுள்ள மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்ட சடலம், சுமார் 8 கிலோமீற்றர்கள் சுற்றி, வல்வை சந்தி, ஆவரங்கால், அச்சுவேலி சந்தியூடாக மயானத்திற்கு சடலம் கொண்டு செல்லப்பட்டது.

# கண்டியில் ஸ்புட்னிக் வி இரண்டாம் கட்ட தடுப்பூசி பெற முடியாத 1இலட்சத்து 20ஆயிரம் பேர் நிர்க்கதி நிலையில்

## நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்தில் ஸ்புட்னிக் வீ தடுப்பூசியின் முதலாம் கட்ட தடுப்பூசி பெற்றவர்கள் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர் இரண்டாம் கட்ட தடுப்பூசி பெற வழியின்றி நிர்க்கதி நிலைக்குள்ளாகி இருப்பதாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கண்டி மாவட்டத்தில் சுமார் இரண்டு மாத காலத்திற்கு முன் ஒரு இலட்சத்து 50ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு ஸ்புட்னிக் வீ முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டது. பின்னர் சுமார் 15ஆயிரம் பேரளவில் இரண்டாம் தடுப்பூசி பெற்றுக் கொண்டனர். புதிதாக இன்னும் 15ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றபோதும் அது சகலருக்கும் போதுமானதல்ல.

எனவே சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாக இரண்டாம் கட்ட தடுப்பூசிக்காக காத்திருப்பவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொள்ள வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். தனக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் படி ஸ்புட்னிக் வீ தடுப்பூசியைத் தயாரிக்கும் ரஷ்ய நிறுவனம் அதனை இடைநிறுத்தியுள்ளதாக அறிய முடிகிறது. மேலும் மேற்படி ஒரு இலட்சத்து 20ஆயிரம் பேருக்கு என்ன செய்வது? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# அனுமதியின்றி பதுக்கப்பட்டிருந்த 213 மெட்ரிக் தொன் சீனி மூடைகள் கூட்டுறவுத் துறையினரிடம் கையளிப்பு

(இக்பால் அலி)

நுகர்வோர் அதிகார சபையில் பதிவு செய்யாமல் கண்டி, குண்டசாலை பிரதேசத்தில் களஞ்சியமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 213 மெட்ரிக் தொன் சீனி தொகை கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அந்த களஞ்சியத்தை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இதன்போது கைப்பற்றப்பட்ட சீனி மூடைகள் நேற்று முன்தினம் கண்டி மாவட்ட செயலகத்தின் முன்னிலையில் விற்பனைக்காக கூட்டுறவு துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

கண்டி நுகர்வோர் அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது கண்டியிலுள்ள களஞ்சியசாலைகளில் பதிவு செய்யாமல் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீனி மற்றும் நெல் மூடைகள் நுகர்வோர் அதிகார சபையால் கைப்பற்றப்பட்டு குறித்த களஞ்சியங்களுக்கு சீல் வைக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அதற்கமைய, அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 213 மெட்ரிக் தொன் சீனி சலுகை விலையில் சந்தையில் விற்பனை செய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் அங்கீகாரத்துடன் சீனி மூடைகள் யாவும் கூட்டுறவு துறையிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டன.

கண்டி மேலதிக மாவட்ட செயலாளர் உத்பால ஜயரத்ன தலைமையில் மத்திய மாகாண கூட்டுறவு துறையிடம் சீனி கையளிக் கப்பட்டது.

எதிர்வரும் நாட்களில் சீனி கூட்டுறவு மற்றும் கூட்டுறவு நகர விற்பனை நிலையங்களால் அரசாங்கத்தின் நிர்ணய விலைக்கு நுகர்வோருக்கு வழங்கப்படும்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண கூட்டுறவு மேம்பாட்டு ஆணையர், நுகர்வோர் விவகார ஆணையத்தின் கண்டி மாவட்டத் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு இன்று முதல் இரண்டாவது தடுப்பூசி

## மருத்துவர் நிமால் அருமைநாதன் அறிவிப்பு

(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்று முதல் இடம்பெறவுள்ளதாக கிளிநொச்சி பிராந்திய தொற்று நோய்ப்பிரிவு மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 65 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. கரைச்சியில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கிளிநொச்சி மத்திய கல்லூரி, புனித தெரேசா மகாவித்தியாலயம், உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலை, வட்டக்கச்சி மத்திய கல்லூரி, அக்கராயன் மகாவித்தியாலயம், பாரதிபுரம் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் இந்த இராண்டாவது தடுப்பூசி வழங்கும் பணிகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, கண்டாவளையில் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், புன்னை நீராவி அ.த.க.பாடசாலை, பிரமந்தனாறு கிராமசேவையாளர் அலுவலகம், தர்மபுரம் மத்திய கல்லூரி, கல்மடுநகர் அ.த.க.பாடசாலை, முருகானந்தா ம.வி., பரந்தன் கிராமசேவையாளர் அலுவலகத்திலும் பூநகரியில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், முழங்காவில் வைத்தியசாலை, பூநகரி வைத்தியசாலை, வேரவில் வைத்தியசாலை, பச்சிலைப்பள்ளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பளை மத்திய கல்லூரி ஆகிய இடங்களிலும் தடுப்பூசி வழங்கப்படும்.

காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் நான்கு மணி வரை தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் பொது மக்கள் ஓரிடத்தில் அதிகளவில் ஒன்று கூடுவதை தவிர்ப்பதற்காகவே மாவட்டத்தின் பல இடங்களிலும் தடுப்பூசி செலுத்தும் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஊரடங்கு காலத்தில் பொது மக்கள் தடுப்பூசி அட்டையினை பயன்படுத்தி பயணிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டு. கிரான்குளம் பகுதியில் வீதியோரங்களில் வீசப்படும் மருத்துவ கழிவுகளால் அசௌகரியம்

## உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை





(மட்டக்களப்பு நிருபர்)

குருக்கள்மடம் -கிரான்குளம் எல்லைப்பகுதியில் பாவித்த மருத்துவ ஊசிகள், மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் குருக்கள்மடம்-கிரான்குளம் எல்லைப்பகுதியில் பாவித்த மருத்துவ ஊசிகள், ஏனைய மருத்துவக் கழிவுப்பொருட்கள் வீசப்பட்டுள்ளதாக அப்பகுதி பிரதேச பொதுமக்கள், ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் கிராமத்தையும், மண்முனை பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் கிராமத்தையும் எல்லையாக கொண்ட மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலைப் பகுதியில் பாவித்த ஊசிகள், ஏனைய மருத்துவக் கழிவுப் பொருட்கள், உடைந்த போத்தல் ஓடுகள், பாவித்த பொலித்தீன் பைகள், பாவித்த பிளாஸ்ரிக் பொருட்கள், உடைந்த இலத்திரனியல் கழிவுகள் உள்ளிட்ட பல கழிவுப்பொருட்கள் வீசப்பட்டுள்ளதால் பயணிக்கும் பிரயாணிகளும் பொதுமக்களும் கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

அருகில் பறவைகள் சரணாலயம், குளம் மற்றும் குருக்கள்மடம் ஐயனார் ஆலயம் என்பன அமைந்துள்ளன. இவ்வாறு கொட்டப்படும் கழிவுப்பொருட்களால் பறவைகள் சரணாலயமும், ஆலயத்தின் புனிதத்தன்மையும் பாதிக்கப்படுகின்றது.

இதனால் பலரும் பலத்த அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இப்பகுதியில் பகலில் கழிவுப்பொருட்கள் வீசப்படுவதை காணமுடியாமல் உள்ளதாகவும், அதிகாலை வேளை அல்லது இரவில்தான் இவ்வாறு மருத்துவக் கழிவுகளை மிகவும் சூட்சுமமான முறையில் இனந்தெரியாதோரால் வீசப்படுவதாகவும் அப்பகுதியிலுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

“இப்பிரதேசத்தில் குப்பைகளைக் கொட்டுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விளம்பரப் பதாகை இடப்பட்டுள்ள போதிலும், அதனைப் பொருட்படுத்தாத சிலரே இவ்வாறு கழிவுகளைக் கொட்டி வருகின்றனர் எனவும் அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர். இது குறித்த உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 300 கிலோ எடையுடைய கொப்புறா மீன் பிடிபட்டது

## கல்முனை மீனவர் மகிழ்ச்சி



(பெரியநீலாவணை நிருபர்)

கல்முனை கடற்கரையில் மீனவர் ஒருவருக்கு 12 அடி நீளம் உடைய கொப்புறா மீன் நேற்று பிடிபட்டது.

இதன் எடை சுமார் 300 கிலோகிராம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள போதிலும் மீன்பிடித் தொழிலாளர்கள் தமது மீன்பிடித் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். கல்முனை கடற்கரைப் பகுதியில் மீனவர் ஒருவருக்கு பிடிபட்ட இந்த மீனின் பெறுமதி சுமார் மூன்று இலட்சம் ரூபா என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை குறித்த மீன் வியாபாரிக்கு சுமார் 50 கிலோகிராம் எடையுள்ள திருக்கை இன மீன் ஒன்றும் நேற்று பிடிபட்டது.

தற்போது கல்முனை கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், பிடித்த மீன்களை சுகாதார சட்ட விதிமுறைகளை பின்பற்றி விற்பனை செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் நீதிமன்ற அனுமதியை மீறி சட்டவிரோத கட்டடம் அமைக்க முயற்சி



(திருகோணமலை நிருபர்)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தை சாதகமாக பயன்படுத்தி திருகோணமலையில் சட்டவிரோத கட்டிடம் ஒன்றை அமைக்க முற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி, திருகோணமலை மரத்தடி பிரதேசத்தில் சனீஸ்வரன் ஆலயத்திற்கு அருகில் இவ்வாறு திருகோணமலை நகராட்சி மன்றத்தில் எவ்வித அனுமதியும் இல்லாமல் சட்டவிரோதமாக கட்டிடம் ஒன்றை கட்டுவதற்கு முயற்சி செய்துள்ளதாக திருகோணமலை நகரசபை செயலாளர் ஜெயவிஷ்ணு தெரிவித்தார்.

மேலும் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சம்பவ இடத்தில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு திருகோணமலை நீதிமன்றத்தினால் ஏற்கனவே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும் ஊரடங்கு சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி இவ்வாறு கட்டிட நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் பொதுமக்களினால் நேற்று முன்தினம் (04) திருகோணமலை நகரசபை செயலாளர் ஜெயவிஷ்ணுவுக்கு தெரியப்படுத்தியதனை அடுத்து குறித்த பகுதிக்கு விஜயம் செய்து, இவ்வாறு சட்டவிரோதமாக அமைக்கப்படவிருந்த கட்டடத்தில் வேலைகளை உடன் நிறுத்துமாறு கட்டளையிட்டிருந்தார்.

மேலும் திருகோணமலை நகரசபை செயலாளர் ஜெயவிஷ்ணுவின் வேண்டுகோளுக்கிணங்க, குறித்த இடத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

# பாடசாலைக்கு சொந்தமான காணி அபகரிப்பு

## மீட்டுத்தருமாறு மாணவர்கள் கோரிக்கை

(அப்துல்சலாம் யாசீம்)

கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட காக்காமுனை அப்துல் ஹமீது வித்தியாலயத்திற்கு சொந்தமான அரச காணியை மீட்டுத்தருமாறு மாணவர்களும் பெற்றோர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

1995ஆம் ஆண்டு கிண்ணியாவை பிறப்பிடமாகக் கொண்ட அப்துல் ஹமீது என்பவரின் மூத்த மகன் தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் தந்தையின் ஞாபகார்த்தமாக பாடசாலையொன்றை நிர்மாணிப்பதற்கு இக்காணியை வழங்கியிருந்தார்.

இருந்தபோதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் பாடசாலை நிர்வாகம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு தெரியாமல் தனி நபரொருவர் பாடசாலைக்கு சொந்தமான காணியை துப்புரவுசெய்து வேலி அமைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.



குறித்த காணி அரச காணி என கிண்ணியா பிரதேச செயலகம் ஆவணப்படுத்தியிருந்த போதிலும் கடந்த 25 வருடங்களாக பாடசாலை மாணவர்களும், இளைஞர்களும் விளையாட்டு மைதானமாக பயன்படுத்தி வந்தனர்.

ஆனாலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும்போது உழவு இயந்திரத்தை பயன்படுத்தி தனக்கு சொந்தமான காணியென கூறி பாடசாலைக்கு அருகில் வேலி அமைத்துள்ளதாகவும் பெற்றோர்கள் குறிப்பிடுகின்றனர்.

பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு போன்ற செயற்பாடுகள் குறித்த இடத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இடம்பெற்று வந்ததாகவும் அப்பாடசாலையின் அதிபர் அஹமட் ராஜி தெரிவித்தார்.

பாடசாலைக்கு சொந்தமான அரச காணியை தனிநபரொருவர் துப்புரவு செய்து தன்னுடைய காணி என கூறுவது எதிர்கால மாணவர்களுக்கு செய்யும் துரோகம் எனவும் இது விடயமாக கிண்ணியா பிரதேச செயலகம் மற்றும் காணி அலுவலகம் மிக விரைவில் கவனம் செலுத்தி பாடசாலைக்கு சொந்தமான அரச காணியை மீட்டுத் தருவதற்குரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் எனவும் பெற்றோர்களும் மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அனுமதியின்றி கொண்டாட்டங்களில் ஈடுபடுவோரின் வீடுகள் களுவாஞ்சிக்குடி சுகாதாரப் பிரிவினரால் முற்றுகை





(பாண்டிருப்பு நிருபர்)

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் அனுமதியின்றி வீடுகளில் நடைபெறும் பிறந்த நாள் நிகழ்வுகள், திருமண நிகழ்வுகளை தேடிக் கண்டுபிடிக்கும் கண்காணிப்பு பணிகள் பிரதேச பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமீபகாலமாக கொரோனா நோயாளர்களின் வீதம் அதிகரித்துச் செல்கின்றன. அதிலும் களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட கிராமங்களில் நாளுக்கு நாள் கொரோனா நோயாளர்கள் அதிகரித்துச் செல்கின்றனர். இப் பிராந்தியத்தில் கொரோனா தொற்று காரணமாக இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் களுவாஞ்சிக்குடி மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்திலுள்ள துறைநீலாவணை, பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஓந்தாச்சி மடம், மகிழுர், குறுமண்வெளி, எருவில், பட்டிருப்பு, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளையும், குருக்கள்மடம் ஆகிய கிராமங்களில் பலர் வீடுகளில் சுகாதாரவிதிமுறைகளைப் பின்பற்றாது பிறந்தநாள், திருமண நிகழ்வுகள், சாமர்த்திய சடங்குகள் ஆகியவற்றை அதிகமான உறவினர்களை ஒன்று திரட்டி நடத்திவருவதாக சுகாதாரப் பிரிவினருக்கு இரகசியத் தகவல்கள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இதற்கமைய பொலிஸாரின் உதவியுடன் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் கிடைக்கப்பெறும் தகவலுக்கமைய நிகழ்வுகள் நடைபெறும் வீடுகளுக்குச் சென்று சட்ட நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

தேற்றாத்தீவு கிராமத்தில் பிறந்தநாள் நிகழ்வு நடைபெறுவதாக சுகாதாரப்பிரிவினருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து அங்கு சென்ற சுகாதாரப்பிரிவினர் நிகழ்வு நடைபெறவிருந்த வீடுகளை சோதனையிட்டனர். குறித்த பகுதிக்கு சுகாதாரப்பிரிவினர் வருகை தருவதை முன்கூட்டியே அறிந்து கொண்டவர்கள் அங்கிருந்து நழுவிச் சென்றுவிட்டனர்.

இதனையடுத்து அப்பகுதியிலுள்ளவர்களை அழைத்து கொரோனா தொற்றின் உயிராபத்தை எடுத்துக்கூறியதுடன், இக் காலப்பகுதியில் எதுவித நிகழ்வுகளையும் வீடுகளில் செய்யவேண்டாம் என வேண்டுகோள்விடுத்தனர்.

# திருமலையில் ஊரடங்கு சட்டத்தை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்ட 10 பேர் கைது

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை - ரொட்டவெவ பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டத்தை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்ட 10 பேரை கைதுசெய்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை- மொரவெவ பொலிஸார், விமானப்படை உத்தியோகத்தர்கள், விஷேட பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் 10 பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த சந்ரலாலின் ஆலோசனைக்கு அமைவாக குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதீப் உட்பட PS 2646 திசாநாயக்க, PS 5069 மனோஜ், PS 61729 நிரோஷன, PS 72415 ரத்னாயக்க, PSD 33601 உத்திக, PSD 88962 பிரசங்க ஆகியோர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நேற்று முன்தினம் இரவு குறித்த சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த 35 வயது தொடக்கம் 55 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் எனவும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டத்தை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் 10 பேரையும் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# கோமரங்கடவல கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு கட்டில்கள் வழங்கிவைப்பு



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை -கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலை இடைத்தங்கல் முகாமிற்கு திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துக்கோரலவினால் கட்டில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கோமரங்கடவல இடைத்தங்கல் முகாமில் 80 நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதற்கு வசதிகள் இருந்தபோதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் - 19 தொற்று காரணமாக அதிகளவிலான நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இந்த இடைத்தங்கல் முகாமில் 120க்கும் மேற்பட்டவர்கள் தங்கி சிகிச்சை பெற்று வருவதாகவும் 80 பேருக்கு மாத்திரமே கட்டில்கள் இருப்பதாகவும் மற்றைய நோயாளர்கள் கட்டில்கள் இல்லாமல் தரையில் பாய் விரித்து தூங்கவேண்டிய நிலை ஏற்பட்டு வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரலவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலையில் நிலவும் கட்டில் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் நோக்கில் கட்டில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது கோமரங்கடவல பிரதேச சபை தவிசாளர் சந்தன மற்றும் மொரவெவ பிரதேச சபை தவிசாளர் ஜகத் குமார வேரகொட ஆகியோர் இணைந்து கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலை வைத்தியர் புத்தி ஜயசிங்கவிடம் கையளித்தனர்.

# சாய்ந்தமருதில் வீதிகளில் உலாவியோரிடம் மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் மூவருக்கு கொரோனா தொற்று

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் வேகமாக பரவிவரும் கொரோனா அலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக கொரோனா அலையை கட்டுப்படுத்த அரசினால் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ள இந்த காலக்கட்டத்தில் எவ்வித காரணங்களுமின்றி வீதியில் உலாவித்திரிந்தோருக்கு எதிராக சுகாதாரத்துறையினரும், பாதுகாப்பு படையினரும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக சாய்ந்தமருதில் அத்தியாவசிய தேவையின்றி வெளியே சென்ற 20 நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனையும் 17 நபர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனையும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி



அலுவலகத்தின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.எல்.அமீன் றிசாடின் வேண்டுகோளுக்கிணங்க பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர்.

நாட்டின் சட்டத் திட்டங்களை மதிக்காமல் வீதியில் உலாவித்திரிந்த 37 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மூவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.அல் அமீன் றிசாட், நாட்டின் சட்டத் திட்டங்களுக்கு மதிப்பளித்து பொதுமக்களை வீட்டிலேயே இருந்து கொள்ளுமாறும், வீட்டைவிட்டு தேவையில்லாமல் வெளியேறி வீட்டில் உள்ளவர்களுக்கு கொரோனா தொற்றை கொண்டு சேர்க்காமல் சுகாதாரத் துறையினருக்கும், கொரோனா நோயை கட்டுப்படுத்த போராடிக் கொண்டிருப்பவர்களுக்கும் ஒத்துழைப்பை வழங்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

# உலக செய்திகள்

# தலிபான் போராளிகளின் புதிய ஆட்சி: தலைமைப் பொறுப்பு யாருக்கு?

## ஆப்கானில் கொட்டிக்கிடக்கும் கனிமவளம்: வெட்டியெடுக்கும் பொறுப்பு சீனாவிடம்

ஆப்கானின் ஆட்சியை கைப்பற்றியுள்ள தலிபான்களின் தலைமையில் அங்கு புதிய அரசு அமையவுள்ளது. இந்நிலையில் புதிய ஆட்சியில் தலைமைப் பொறுப்பேற்பவர் யார் என்கின்ற கேள்வி எழுந்துள்ளது.

இதேவேளை புதிய அரசை இன்னும் சில தினங்களில் அமைக்கவிருப்பதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர். சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு பரந்த நிர்வாகத்தை ஏற்படுத்த தலிபான்கள் முயன்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதே நேரத்தில் இந்தியாவின் நட்புறவை விரும்புவதாகவும், சீனா முக்கிய கூட்டாளி என்றும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி சுமார் ஒரு மாதம் (30 நாட்கள்) ஆகின்ற நிலையில் அங்கு இன்னும் அரசமைப்பதில் சிக்கல்நிலை நீடித்து வருகிறது.

இந்நிலையில் ஷேக் ஹைபத்துல்லாஹ் அகுன்ஸதா ஆப்கானின் மதத்தலைவராக பொறுப்பேற்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவருடன் தலிபான் அமைப்பின் துணை நிறுவனர் முல்லா அப்துல் கனி பராதர் ஜனாதிபதியாகவும், முல்லா முகமது உமரின் மகன் முகம்மது யாகூப் முக்கியப் பொறுப்பில் அமர்த்தப்படுவார் என்றும் தெரியவந்துள்ளது. இந்த அரசு விரைவில் அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தலிபான் அரசு அமைக்கப்பட்ட சில வாரங்களுக்குப் பின்னர் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும் என்று தலிபான் தலைவர்களில் ஒருவரான அனஸ் ஹக்கானி தெரிவித்துள்ளார். அதே நேரம் உளவுத்துறை, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் பாகிஸ்தானுக்கு முன்னுரிமை கொடுக்கவும் தலிபான்கள் ஆயத்தமாகி வருகின்றனர்.

இதனிடையே சீனா தங்களின் முக்கியப் பங்குதாரர் என்று குறிப்பிட்டுள்ள தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹூல்லாஹ் முஜாஹித், ஆப்கானிஸ்தானிலுள்ள செப்புச் சுரங்களில் சீனா முதலீடு செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கு பிரதி உபகாரமாக சீனாவின் (ஒன் பெல்ட் ஒன் ரோட்) பட்டுப்பாதைத் திட்டத்திற்கு முழு ஆதரவளிப்பதாகவும் ஷபிஹூல்லாஹ் முஜாஹித் (Zabihullah Mujahid) தெரிவித்துள்ளார்.



ஹைபத்துல்லாஹ் அகுன்ஸதா



முல்லா அப்துல் கனி பராதர்

### காபூலில் தூதரகத்தைத் திறந்து வைத்திருக்க சீனா உறுதி

ஆப்கானிஸ்தானிலிருந்து தங்கள் தூதரகங்களை ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்ற பிற நாடுகள் பரிசீலிக்கும் வேளையில் சீனா மட்டும் காபூலில் தனது தூதரகத்தை திறந்து வைத்திருக்க உறுதியளித்துள்ளது.

முல்லா அப்துல் கனி பராதர் தலைமையிலான குழு ஒன்று கடந்த ஜூலை மாதம் சீனாவின் வெளியுறவு அமைச்சருடன் பேச்சு நடத்தியது. ஆப்கானின் முக்கியமான அரசியல் மற்றும் இராணுவ இயக்கம் என்று தலிபானை அழைத்த சீனா, ஆப்கான் அரசு வீழ்ந்த பின்னர் தலிபானுக்கு முக்கிய நட்பாக மாறியுள்ளது.

ஆப்கானுக்கு மனிதாபிமான உதவிகளை அதிகரிப்பதற்கும் சீனா ஒப்புதல் அளித்துள்ளது. புதிய தலிபான் அரசு தீவிரவாத குழுக்களுடனான உறவை கைவிட வேண்டும் என்றும் சீனா வலியுறுத்தியுள்ளது.

### கனிம வளத்தை வெட்டியெடுக்கும் பொறுப்பு சீனாவுக்கு

ஆப்கானில் கொட்டிகிடக்கும் கொப்பர் கனிமத்தை வெட்டி எடுக்க சீனாவை அனுமதிக்கவுள்ளதாக தலிபான்கள் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

நவீன தொழிற்சாலைகளை அமைத்து ஆப்கானின் கொப்பர் கனிம தொழிலை சீனா மேம்படுத்தும். ஆப்கானின் உற்பத்தி பொருட்களை உலகிற்கு விற்கும் சந்தையாகவும் சீனா இருக்கும். சீனாவைப் போன்று ரஷ்யாவும் தலிபான்களின் முக்கிய வர்த்தக கூட்டாளியாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பாகிஸ்தான் உளவுத்துறை தலைவர் ஆப்கான் பயணம்

ஆப்கானிஸ்தானில் புதிய அரசாங்கத்தை அமைக்க தலிபான்கள் போராடி வரும் நிலையில், பாகிஸ்தான் உளவுத்துறை தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ஃபைஸ் ஹமீத் காபூலுக்குச் சென்றுள்ளார்.

தலிபான் தலைவர்களின் அழைப்பின் பேரில் பாகிஸ்தான் அதிகாரிகளுடன் சென்றதாகவும், இருநாடுகளின் எதிர்கால உறவுகள் குறித்து விவாதிக்க சென்றிருப்பதாகவும் ஃபைஸ் ஹமீத் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து பறந்த உதவி

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து பொருட்கள் அடங்கிய விமானம் காபூலுக்கு வந்துள்ளதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

ஆட்சியை கைப்பற்றியதையடுத்து பல்வேறு நாடுகளிடமிருந்து பொருட்களை அனுப்புமாறு தலிபான்கள் உதவி கேட்டு வருகின்றனர். இந்நிலையில் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து முதல் உதவி விமானம், காபூல் விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளதாக தலிபான்கள் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதேநேரம் விமானத்தில் என்ன பொருட்கள் இருந்தன என்பது குறித்து தலிபான்கள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை.

### பஞ்ச்ஷீருக்கு வெளியே தலிபான்கள்

தேசிய கிளர்ச்சி படையினரின் வசமிருந்த பஞ்ச்ஷீர் மாகாணத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ளதாக அறிவித்திருந்தனர். ஆனால், தலிபான்களின் முற்றுகை தடுத்து நிறுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ள போராளி குழுவினரின் தலைவர் அம்ருல்லாஹ் சாலேஹ் தாங்கள் இக்கட்டான சூழலிலுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் பஞ்ச்ஷீர் மாகாணம் அருகே கவச வாகனங்கள் அணிவகுத்து நிற்கும் வீடியோவை தலிபான்கள் வெளியிட்டுள்ளனர்.

### உரிமைகளை வலியுறுத்தி பேரணி சென்ற பெண்கள்

ஆப்கானிஸ்தானில் உரிமை வலியுறுத்தி பேரணி சென்ற பெண்கள் மீது கண்ணீர் புகை குண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தலைநகர் காபூலில் தங்கள் உரிமைகளை வலியுறுத்தி ஏராளமான பெண்கள் பேரணி சென்றனர். அவர்களைத் தலிபான்கள் தடுத்ததால் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், Electric Taserகளால் ஷொக் வைத்தும் அந்தப் பெண்களை தலிபான்கள் அப்புறப்படுத்தியுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை இரத்தம் வலியும் அளவிற்கு துப்பாக்கியால் தலிபான்கள் அடிக்கும் காட்சி பதற வைத்துள்ளது.

## ராணி எலிசபெத் இறந்தால் செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள்

### கசிந்தது இரகசிய ஆவணம்



பிரிட்டன் ராணி எலிசபெத் இறந்தால் அதற்குப் பின்னர் செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்த ஆவணம் முதன் முறையாக வெளியே கசிந்துள்ளது.

‘ஒபரேஷன் லண்டன் பிரிட்ஜ்’ என்று பெயரிடப்பட்டுள்ள விரிவான திட்டம் குறித்த தகவல்கள் அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு இயங்கும் Politico என்னும் செய்தி நிறுவனத்துக்கு கிடைத்துள்ளது.

அதில் ராணி எலிசபெத் இறந்த பின்னர் அவரது உடல் 10 நாட்கள் கழித்து தகனம் செய்யப்படும் என்றும், தகனம் செய்யப்படுவதற்கு முன், அடுத்ததாக அரியணையில் ஏறப் போகும் இளவரசர் சார்லஸ் பிரிட்டனில் நான்கு நாட்கள் சுற்றுப் பயணம் செல்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் மூன்று நாட்கள் வைக்கப்படும் ராணி எலிசபெத்தின் உடலைப் பார்க்க பெருந்திரளான மக்கள் லண்டனை நோக்கி படையெடுக்க வாய்ப்பிருப்பதால் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாகவும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “காயமடைந்தால் என்னை நெற்றிப்பொட்டில் சுட்டுவிடு”

### ஆப்கான் முன்னாள் துணை ஜனாதிபதி அம்ருல்லாஹ் சாலேஹ்



காபூலை விட்டுச் செல்லும்போது தனது மனைவி, மகள் உள்ளிட்டோரின் புகைப்பட அடையாளங்களை அழித்துவிட்டுச் சென்றதாக பஞ்ச்ஷீர் உள்ளூர் போராளி குழுவின் தலைவராகவுள்ள ஆப்கானிஸ்தானின் முன்னாள் துணை ஜனாதிபதி அம்ருல்லாஹ் சாலேஹ் தெரிவித்துள்ளார்.

ஆப்கானை விட்டுத் தப்பிச் செல்லாமல், தாம் பஞ்ச்ஷீர் பகுதிக்கு சென்றது குறித்து அவர் எழுதிய கட்டுரையொன்றில் இதனை விளக்கியுள்ளார்.

தலிபானிடத்தில் ஒருபோதும் சரணடையக் கூடாது என்பதில் உறுதியாக இருந்ததாகவும், ஒருவேளை தாம் காயமடைந்துவிட்டால் நெற்றியில் துப்பாக்கியை வைத்து 2 முறை சுட்டுவிடும் படி தனது பாதுகாவலரிடம் உத்தரவிட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெற்றிக் கொண்டாட்டம் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூடு; 17பேர் பரிதாப பலி

ஆப்கானிஸ்தானில் கொண்டாட்ட மிகுதியில் கண்மூடித்தனமாக தலிபான்கள் துப்பாக்கியால் சுட்டதில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

எஞ்சியுள்ள பாஞ்ச்ஷீர் மாகாணமும் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததாக வெளியான தகவலை நம்பி சந்தோஷமடைந்த தலிபான்கள் உற்சாக மிகுதியில் வானை நோக்கி சுட்டதில் காபூலில் 17 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே இது குறித்து ட்விட்டரில் செய்தி வெளியிட்டுள்ள தலிபான் செய்தித் தொடர்பாளர் Zabihullah Mujahid, வானை நோக்கி சுடுவதை தவிர்த்து கடவுளுக்கு நன்றி தெரிவிக்குமாறும், துப்பாக்கி குண்டுகள் பொதுமக்களை காயப்படுத்த வாய்ப்பிருப்பதால் தேவையில்லாமல் சுடுவதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

## தலிபான்களுக்கு சவாலாக விளங்கும் பஞ்ச்ஷீர் போராளிகள்

### 200 தலிபான்கள் கொன்று குவிப்பு



ஆப்கானில் எஞ்சியிருக்கும் பஞ்ச்ஷீர் மாகாணத்தைக் கைப்பற்ற தலிபான்கள் கடும் யுத்தம் மேற்கொண்டுள்ள நிலையில், ஒரு மலையையே தகர்த்து 200 தலிபான்களை போராளி குழுவினர் கொன்றுள்ளனர்.

இதையடுத்து தலிபான் படைகள் தலைதெறிக்க பின்வாங்கி ஓடிய வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

அகமது மசூத் மற்றும் அம்ருல்லாஹ் சாலேஹ் தலைமையிலான போராளி குழுவினர், தலிபான்களுக்கு பெரும் சவாலாக விளங்கி வருகின்றனர். தலிபான் நான்கு மாவட்டங்களைக் கைப்பற்றி விட்டதாக அறிவித்த நிலையில் தங்கள் எதிர்ப்புப் போராட்டம் உயிர்ப்புடன் இருப்பதாகவும் தலிபானுக்கு கடும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் போராளி குழு தெரிவித்துள்ளது.

## அசமந்த அரசியல்



ஆந்திராவில் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த அரச பஸ்ஸொன்றின் பின் டயர்கள் இரண்டும் தனியாக கழன்று சென்றதால் பயணிகள் அதிர்ச்சியடைந்தனர்.

கிழக்கு கோதாவரி மாவட்டம் கோகவரத்திலிருந்து படகோட்டா நோக்கி அரசுக்கு சொந்தமான பஸ்ஸொன்று மலைப்பாதையூடாக சுமார் 20 பயணிகளுடன் சென்று கொண்டிருந்தபோது பஸ்ஸின் பின்பக்க டயர்கள் இரண்டும் திடீரென தனியாக கழன்று வந்த நிலையில், சிறிது தூரம் சென்ற பஸ் மண்ணில் சிக்கி நின்றது. இதனால், பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

தகவல் அறிந்த போக்குவரத்துத்துறை அதிகாரிகள் வேறு பஸ்ஸை வரவழைத்து பயணிகளை அழைத்து சென்றனர். axle இணைப்பு பழுதடைந்திருந்ததால், டயர்கள் தனியாக கழன்றிருக்கக் கூடும் என கூறப்படுகிறது.

## எருமை மாட்டை பலியிட்டு அதன் இரத்தத்தை நடிகரின் படத்துக்கு தெளித்து பிறந்தநாள் கொண்டாட்டம்



எருமை மாட்டைப் பலியிட்டு அதன் இரத்தத்தை நடிகர் சுதீப்பின் படத்தில் தெளித்து ரசிகர்கள் பிறந்தநாள் கொண்டாடிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நான் ஈ, புலி படங்களின் மூலம் தமிழில் பிரபலமானவர் கிச்சா சுதீப். கன்னட திரையுலகில் முன்னணி கதாநாயகனான இவர், தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் முன்னணி வேடங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் அவரின் 50ஆவது பிறந்த நாள் விழா ரசிகர்கள் சார்பில் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. ரசிகர்கள் அவரது கட்டவுட்டுக்கு பாலாபிஷேகம் செய்து பிறந்த நாளைக் கொண்டாடினர்.

இந்நிலையில் கர்நாடகம் பெல்லாரி மாவட்டம் சந்தூர் என்ற கிராமத்தில் நூற்றுக்கணக்கான சுதீப் ரசிகர்கள் ஒன்றுகூடி ‘கட் அவுட்’ வைத்து பிரமாண்டமாக பிறந்தநாள் கொண்டாடினர். அப்போது சில ரசிகர்கள் அங்கு எருமை மாட்டை அழைத்து வந்து, அதைப் பலியிட்டு அந்த இரத்தத்தைக் கட் அவுட் மீது தெளித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி காண்போரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதனையடுத்து பெல்லாரி நகர் காவல்துறையினர் சுதீப் ரசிகர்கள் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ருத்ர தாண்டவம் ஆடும் இடா புயல்: வெள்ளத்தில் மிதக்கும் அமெரிக்க நகரங்கள்





பருவநிலை மாற்றம் காரணமாக அமெரிக்காவில் அடிக்கடி சக்தி வாய்ந்த புயல்கள் தாக்கி வந்த நிலையில் மெக்சிகோ வளைகுடாவில் உருவான ‘இடா புயல்’ அமெரிக்காவை புரட்டி போட்டுள்ளது. வரலாறு காணாத வகையில் பெய்துவரும் கடும் மழை காரணமாக அமெரிக்காவின் பல்வேறு நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

# முதல் சதத்தை பதிவுசெய்த ரோஹித்



இங்கிலாந்து அணியுடனான நான்காவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தில் சதம் அடித்து அசத்திய ரோஹித் சர்மா, வெளிநாட்டு மண்ணில் தனது முதல் டெஸ்ட் சதத்தை பதிவு செய்தார்.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி, இங்கிலாந்துக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி கடந்த வியாழக்கிழமை லண்டன் த ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது.

இந்த போட்டியில் இந்திய அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ரோஹித் சர்மா சதம் கடந்து 127 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். 34 வயதான ரோஹித் சர்மா கடந்த 2013ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணியுடனான டெஸ்ட் போட்டியில் அறிமுகம் பெற்றார்.

கடந்த 8 ஆண்டுகளில் 42 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ரோஹித் சர்மா, 43ஆவது டெஸ்ட் போட்டியில் வெளிநாட்டு மண்ணில் தனது முதல் டெஸ்ட் சதத்தை பதிவு செய்தார்.

# இலங்கைக்கு பதிலடி கொடுத்த தென்னாபிரிக்கா

இலங்கை அணியுடனான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் தென்னாபிரிக்க அணி டக்வர்த்-லூவிஸ் முறைப்படி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இலங்கை அணிக்கு பதிலடி கொடுத்து தொடரை சமப்படுத்தியது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியானது இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் விளையாடுகிறது. முதல் தொடராக 3 போட்டிகள் கொண்ட ஐ.சி.சி உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் ஒருநாள் சர்வதேச தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்பத்தில் மழை பெய்ததன் காரணமாக போட்டி அணிக்கு 47 ஓவர்கள் கொண்ட போட்டியாக ஆரம்பமானது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 47 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 283 ஓட்டங்களை குவித்தது. 284 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இலங்கை அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த வேளையில் இடைநடுவில் மழை குறுக்கிட்டது.





பின்னர் போட்டி 41 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டு இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 265 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. எனினும் இலங்கை அணி 36.4 ஓவர்களில் 197 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழக்க, போட்டியில் தென்னாபிரிக்க அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் 1-1 என்ற அடிப்படையில் சமநிலை பெற்றுள்ளது.

தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கின்ற மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டி நாளை பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# நிறைவுக்கு வந்தது டோக்கியோ பராலிம்பிக்

## சீனா முதலிடம்

## வரலாற்று சாதனை படைத்த இலங்கை





(ஏ.அகீல் சிஹாப்)

டோக்கியோ பராலிம்பிக் போட்டிகள் நேற்று நிறைவுக்கு வந்த நிலையில் இலங்கை ஒரு தங்கம் மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் உள்ளடங்கலாக மொத்தமாக இரண்டு பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் 57ஆவது இடத்தைப் பிடித்துக் கொண்டது.

அங்கவீனர்களுக்கும் உலகில் அங்கீகாரத்தை கொடுக்கும் பராலிம்பிக் போட்டிகளின், 2020 டோக்கியோ பராலிம்பிக் கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுடன் நிறைவுக்கு வந்தது. கடந்த 2016 ரியோ பராலிம்பிக்கில் முதல் இடத்தைப் பிடித்த சீனா, டோக்கியோ பராலிம்பிக்கில் 200க்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்று முதலிடத்தைப் பெற்றது.

2016 ரியோ பராலிம்பிக்கில் ஒரு வெண்கலப் பதக்கத்தை மாத்திரம் பெற்று புள்ளிப்பட்டியலில் 76ஆவது இடத்தை பிடித்த இலங்கை, டோக்கியோ பராலிம்பிக்கில் 2 பதக்கங்களை வென்றது. அதிலும் குறிப்பாக ஒலிம்பிக், பராலிம்பிக் வரலாற்றிலேயே இலங்கை முதல் முறையாக தங்கப்பதக்கத்தை சுவீகரித்தது. ஈட்டி எறிதல் போட்டியில் தினேஷ் பிரியந்த ஹேரத் இலங்கைக்கு தங்கப்பதக்கத்தை வென்று கொடுத்து ஒலிம்பிக் வரலாற்றில் இலங்கையின் தேசிய கீதத்தை முதல் முதலாக ஒலிக்கச் செய்தார்.

மேலும் ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கத்தை சமித்த துலான் கொடித்துவ பெற்றுக்கொடுத்தார். எனினும் இலங்கையின் ஏனைய பல போட்டியாளர்கள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றிருந்தாலும் கூட அவர்கள் பதக்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தனர்.

தங்கப்பதக்கம் வென்ற தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு ரூ.5 கோடி பணப்பரிசும், வெண்கலப் பதக்கம் வென்ற சமித்த துலான் கொடித்துவவுக்கு ரூ.2 கோடி பணப்பரிசும் வழங்க விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

TOKYO 2020 PARALYMPIC GAMES

**FINAL MEDALS TABLE**

| | | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 01. | PEOPLE'S REPUBLIC OF CHINA | 96 | 60 | 51 | 207 |
| 02. | GREAT BRITAIN | 41 | 38 | 45 | 124 |
| 03. | UNITED STATES OF AMERICA | 37 | 36 | 31 | 104 |
| 04. | RPC | 36 | 33 | 49 | 118 |
| 05. | NETHERLANDS | 25 | 17 | 17 | 59 |
| 06. | UKRAINE | 24 | 47 | 27 | 98 |
| 07. | BRAZIL | 22 | 20 | 30 | 72 |
| 08. | AUSTRALIA | 21 | 29 | 30 | 80 |
| 09. | ITALY | 14 | 29 | 26 | 69 |
| 10. | AZERBAIJAN | 14 | 1 | 4 | 19 |

# ஆப்கானில் கால்களை இழந்தவருக்கு ஜப்பானில் தங்கம்

(ரமணி)

கண்ணிவெடி அகற்றும் தொழில்நுட்பக்குழுவின் பொறியாளரான அவுஸ்திரேலியாவை சேர்ந்த கேனோயிஸ்ட் கர்டிஸ் மெக்ராத், ஜப்பானில் நடைபெற்ற பராலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்றார். ஆப்கானிஸ்தானில் பணியாற்றும்போது ஏற்பட்ட விபத்தில் இரண்டு கால்களையும் இழந்தார்.

டோக்கியோ பராலிம்பிக்கில் ஆண்கள் கே.எல் 2 கேனோ ஸ்பிரிண்ட் பிரிவில் மெக்ராத் முதலிடம் பிடித்தார். ஐந்து வருடங்களுக்கு முன்னர் ரியோ ஒலிம்பிக்கில் வென்ற தங்கத்தை கர்டிஸ் மெக்ராத் தக்கவைத்துள்ளார்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு, 24 வயதுடைய கேனோயிஸ்ட் கர்டிஸ் மெக்ராத் பணியாளராக இருந்தார். ஆப்கானிஸ்தானின் கிளர்ச்சியடைந்த பகுதிகளில் மூன்று மாதங்கள் கடமையாற்றினார். ஆகஸ்ட் 23, 2012 அன்று எதிர்பாராத விபத்தில் இரண்டு கால்களையும் இழந்தார். ஆனால் ஒரு இளம் போர் பொறியாளராக உலகின் மிக ஆபத்தான வேலைகளில் ஒன்றான கண்ணிவெடிகளை அகற்றும் பணியாற்றியதற்காக வருத்தப்பட மாட்டேன் என மெக்ராத் கூறினார்.

இரண்டு வருடங்களுக்குள் மெக்ராத் முதலில் முயற்சித்த கேனோயிங்கில் தேசிய அளவில் போட்டியிட்டார். பரா விளையாட்டுகளின் உச்சத்திற்கு அவரது உயர்வு எவ்வளவு சுவாரஸ்யமாக இருந்தது. ஆகஸ்ட் 23, 2012 மெக்ராத் தனது கால்களை இழந்தார். செப்டெம்பர் 15, 2016 அவர் ஒரு பராலிம்பிக் தங்கப் பதக்கம் வென்றார்.



# முன்னணி வீராங்கனை ஒசாகா அதிர்ச்சி தோல்வி



டென்னிஸ் போட்டிகளிலிருந்து விலகுவதாக கண்ணீருடன் தெரிவிப்பு

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீராங்கனையான ஜப்பானின் நவோமி ஒசாகா அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர் கடந்த ஓகஸ்ட் 24ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. நடப்பு சம்பியனான ஜப்பானைச் சேர்ந்த நவோமி ஒசாகா, மூன்றாவது சுற்று ஆட்டத்தில் கனடாவைச் சேர்ந்த 18 வயது வீராங்கனை லேலா பெர்னாண்டஸை எதிர்கொண்டார். முதல் செட்டை கைப்பற்றிய நவோமி ஒசாகா அடுத்த இரு செட்களையும் இழந்தார்.

இறுதியில் 5-7, 7-6, 6-4 என்ற செட் கணக்கில் லேலா பெர்ணான்டஸ் வெற்றி பெற்றார். தோல்விக்குப் பின் செய்தியாளர்களை சந்தித்த ஒசாகா, ‘சிறிது காலம் டென்னிஸ் போட்டிகளிலிருந்து விலகியிருக்க முடிவு செய்துள்ளதாக கண்ணீருடன் கூறினார்.

மன உளைச்சல் காரணமாக, விம்பிள்டன் தொடரிலிருந்து விலகிய நவோமி ஒசாகா, டோக்கியோ ஒலிம்பிக்கிலும் பதக்கம் வெல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


# அடியோடு அழிந்துபோகும் ஆப்கான் மகளிர் கிரிக்கெட்


ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அமைத்துள்ளதால் அந்நாட்டு மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகள், உயிருக்கு அஞ்சி தலைமறைவு வாழ்க்கைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதே நிலை தான் ஆப்கான் மகளிர் உதைபந்து வீராங்கனைகளுக்கும் ஏற்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் மகளிர் கிரிக்கெட் அணி கடந்த 2010ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

அந்த அணி சர்வதேச போட்டிகளில் பெரிதாக பங்கேற்காவிட்டாலும், அண்மைய நாட்டு அணிகளுடன் விளையாடி வந்தது. இந்த நிலையில் ஆப்கானில் தலிபான்கள் ஆட்சி அமைந்த நிலையில் மகளிர் கிரிக்கெட் வீரர்கள் தலைமறைவு வாழ்வை தொடங்கியுள்ளனர். முந்தைய தலிபான்கள் ஆட்சியில் பெண்கள் விளையாடுவது தடை செய்யப்பட்டதோடு, மீறியவர்களுக்கு கொடூர தண்டனையும் கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில் மீண்டும் தலிபான்கள் ஆட்சி அமைந்துள்ளதால், மகளிர் கிரிக்கெட் மற்றும் உதைபந்து வீராங்கனைகளின் உயிருக்கே உத்தரவாதம் இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளது.









16ஆவது டோக்கியோ பராலிம்பிக் போட்டிகள் கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி ஆரம்பமான நிலையில் ஜப்பான் நேரப்படி நேற்று இரவு 8.00 மணிக்கு கோலாகலமாக நிறைவுக்கு வந்தது.



